திருக்கோயில்

மார்ச் 1995 விலை ரூ. 3-00

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்

பண்ணாரி – 638 401.

வழி: சத்தியமங்கலம் வட்டம், பெரியார் மாவட்டம்.

"பங்குனி குண்டம் பெருந்திருவிழா"

1995-ஆம் ஆண்டு திருவிழா கீழ்க்கண்ட விவரப்படி நடைபெறவுள்ளது.

20—3—1995	திங்கட்கிழமை இரவு "குண்டம் திருவிழா"
22—3—1995	புதன்கிழமை இரவு "புஷ்பரதம்"
27—3—1995	திங்கட்கிழமை "மறுபூஜைத்திருவிழா"

குறிப்பு : 1. "குண்டம் மற்றும் மறுபூஜை" நாட்களில் வழக்கம்போல் இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறும்.

2. பண்ணாரிக்குப் பல பகுதிகளில் இருந்தும் தனிப்பேருந்து வசதிகள் உண்டு. பக்தர்கள் சௌகரியம் கருதி மலிவான விலையில் புளிசாதம், தயிர்சாதம் தயார் செய்து திருக்கோயில் மூலம் விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் திருவிழாவில் கலந்து கொண்டு காணிக்கைகளை, உண்டியலில் செலுத்தி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருவருளைப் பெற்றுய்யும்படி வேண்டுகிறோம்.

3. இத்திருக்கோயிலில் தமிழக அரசு ஆணைப்படி அம்பாளுக்கு உச்சி காலத்தில் நைவேத்தியம் செய்து பக்தர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. பக்தர்கள் இந்தத் திட்டத்திற்கு ரூ. 1,001 அல்லது அதற்குமேல் நன்கொடை செலுத்தி பங்கு கொள்ளும்படி அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

4. அருள்மிகு அம்பாளுக்கு தங்கரதம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. அன்பர்கள் இந்தத் திட்டத்திற்கு தங்களது காணிக்கைகளைச் செலுத்துமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இங்ஙனம்

ச. இளங்கோ, பி.ஏ., பி.எல்., டி பி எம் ,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

திருமதி இராஜமணி தங்கவேல்
தலைவர், அறங்காவலர் குழு.

எஸ் கே பழனிச்சாமி
எம். விவேகானந்தன்
ஆர். தங்கவேலு
ஏ. சிவகுமார் பி.ஏ., பி.எல்.
திருமதி டி. சிவகாமி
(அரசு நியமன அறங்காவலர்கள்)

ஆர். ராஜப்பன்
சி. வி. கோதண்டராமன்
ப. வீரப்பகவுடர்
வீ. புருஷோத்தமன்
சி.வி. ராஜேந்திரன்
(பரம்பரை அறங்காவலர்கள்)

முகப்பு:
சோளிங்கர்
அருள்மிகு யோக ஆஞ்சநேயர்

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் ந. அமிர்தலிங்கம், M.A.,Ph.D

மாலை: 37 | திருவள்ளுவர் ஆண்டு 2026 பவ ஆண்டு பங்குனி | 1995 மார்ச் விலை ரூ. 3—00 | மணி: 3

திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்.

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

உயர்திரு ஆணையர் அவர்கள்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
சென்னை—600 034

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

அரை ஆண்டு	—	ரூ.	18-00
ஓர் ஆண்டு	—	ரூ.	36-00
ஆயுள்	—	ரூ.	300-00

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

பொருளடக்கம்

ஆசிரிய ஜோதி
—திருமிகு ச. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ்.

பயனற்ற தவம்
—இளையஞானி

உள்ளக்கிழியில் உரு எழுது
—சித்தாந்த சிகாமணி இராஜசேகரன்

நீரினில் நனைந்த நிமலன்
—வெ. சுந்தரம், எம்.ஏ.,

நற்றமிழ் 'யுவ'ப் புத்தாண்டு நல்வாழ்த்து
—புலவரேறு ஆ.ஜெ. இராமசாமி

ஸ்ரீ பால விநாயகர்
—டாக்டர் தேவகி பிரகாசம்

அதிசய சாஸ்தா ஆலயம்
—தா. காசிநாதன்

ஆலமர் செல்வன் தட்சிணாமூர்த்தி
—தி. இராசமாணிக்கம்

அழிஞ்சில் மரத்தீசர் உறையும் சின்னகாவணம்
—புலவர் இரா. ஜெகதீசன், எம்.ஏ.

ஸ்ரீ லட்சுமி நரசிம்மசுவாமிபோற்றி மாலை
—வி. எஸ். சச்சிதானந்தம்

அரியும் சிவனும் ஒண்ணு
— தவத்திரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

நாலாயிர திவ்வியப் பிரபந்த நயவுரை
—டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

ஆசிரிய ஜோதி

திருமிகு ச. சாவர்க்கர், ஐ.ஏ.எஸ்.,

ஆணையாளர், இந்து சமய அறநிலையத்துறை
சென்னை-34.

கடவுளைக் காண்பிக்கும் ஜோதி நீயே
கடந்ததை நினைவூட்டும் ஜோதி நீயே
கர்மவினை விளக்கிடும் ஜோதி நீயே
கார்இருள் நீக்கிடும் ஜோதி நீயே. (1)

உயிர்நோய்க்கு ஒளிகாட்டும் ஜோதி நீயே
உடல்நோய்க்கு மருந்தாகும் ஜோதி நீயே
வன்னெஞ்சருக்கும் வழிகாட்டும் ஜோதி நீயே
நன்னெஞ்சருக்கு நலம் காட்டும் ஜோதி நீயே (2)

புரியாததைப் புரியவைக்கும் ஜோதி நீயே
அறியாததை அறியவைக்கும் ஜோதி நீயே
வேண்டாததை வெறுக்கவைக்கும் ஜோதி நீயே
வேண்டியதைக் கொடுக்கவைக்கும் ஜோதி நீயே (3)

ப்க்தி வரவைக்கும் ஜோதி நீயே
சக்தி பெறவைக்கும் ஜோதி நீயே
உக்தி தெரியவைக்கும் ஜோதி நீயே
முக்தி தரவைக்கும் ஜோதி நீயே (4)

உபாயம் சொல்லும் ஜோதி நீயே
அபாயம் தடுக்கும் ஜோதி நீயே
உபயம் கொடுக்கும் ஜோதி நீயே
அபயம் அளிக்கும் ஜோதி நீயே (5)

தன்னை எண்ணவைக்கும் ஜோதி நீயே
தான்யாரென உணரவைக்கும் ஜோதி நீயே
அன்பினை மலரவைக்கும் ஜோதி நீயே
ஆசையை உலரவைக்கும் ஜோதி நீயே. (6)

நடிப்பவனை நாடவைக்கும் ஜோதி நீயே
படிப்பித்து ஏற்கவைக்கும் ஜோதி நீயே
நினைப்பவனை கூர்மையாக்கும் ஜோதிநீயே
நிந்திப்பவனை நேர்மையாக்கும் ஜோதி நீயே. (7)

பொய்தனைப் போக்கவைக்கும் ஜோதி நீயே
பொல்லாதன நீக்கவைக்கும் ஜோதி நீயே
மெய்தனை மிளிரவைக்கும் ஜோதி நீயே
செய்வதனையே செய்யவைக்கும் ஜோதி நீயே. (8)

முயல்வோனை முந்தவைக்கும் ஜோதி நீயே
பயில்வோனைப் பணியவைக்கும் ஜோதி நீயே
துயில்வோனை விழிக்கவைக்கும் ஜோதி நீயே
மயில்வாகனனைக் காட்டவைக்கும் ஜோதிநீயே (9)

ஆர்வந்தனைப் பற்றவைக்கும் ஜோதி நீயே
ஆனந்தம்தனை முற்றவைக்கும் ஜோதி நீயே
அமர்க்களம் மங்கவைக்கும் ஜோதி நீயே
மங்களம் பொங்கவைக்கும் ஜோதி நீயே. (10)

பயனற்ற தவம்

இளையஞானி

உபதேசத்தை நாம் யார் யாரிடமிருந்தும் பெறலாம். இறைவன் சிவபெருமானே தம் மகன் முருகப் பெருமானிடம் இருந்து முறையாக உபதேசம் கேட்டவர்தான். மகன் எழுதிய ஒரு வார்த்தையைப் படித்துப் பார்த்துவிட்டு மகானானவர் பட்டினத்து அடிகள். தன் மகன் புருவின் வார்த்தையை நினைத்து உணர்ந்து பேறு பெற்றார் யயாதி சக்கரவர்த்தி. மனைவியிடமிருந்து உபதேசம் பெற்றவர் துளசிதாசர். கோயிலைத் தூய்மைப்படுத்தும் வேலையாளிடமிருந்து உபதேசக் கருத்துகளை ஏற்றவர் ஆதிசங்கரர். தம் சீடரிடம் பேறு பெற்றவர்தான் அருணந்திச் சிவாச்சாரியார். மாடுமேய்க்கும் சிறுவனிடம் உயர்ந்த மெய்ப்பொருளைப் பெற்றவர்தான் ஔவையார்.

'மகான்கள் பலரும், தம் சொல்லாலும் செயலாலும் தம்மையடைந்தவர்களுக்கு அவரவர் பக்குவ நிலைக்கேற்ப உபதேசித்து அருள் பாலிக்கிறார்கள். பக்குவநிலையை உணர்ந்து அதற்கேற்றாற்போல உபதேசிக்கும் முறையாலேதான் மகான்கள் சிறக்கிறார்கள். மெய்ப்பொருளை உணர்ந்து நாம் உய்வதைவிட, மற்றவர்களுக்கும் அதைப் பக்குவமாக உபதேசித்து அவர்களையும் உய்விக்க செய்வதே சிறந்த தொண்டாகும்.

இத்தகைய தொண்டைத்தான் நடுக்காட்டில் வாழ்ந்த ஒரு துறவி செய்தார்.

இத்துறவி தன்னந்தனியே நடுக்காட்டில் எந்நேரமும் தியானம் செய்துகொண்டிருந்தார். இங்கு தினமும் நடு இரவில் ஒரு கள்வன் வருவான். துறவியைப் பார்த்துக் கேலி செய்துகொண்டு போவான். பொய், களவு, சூது, வாது, கட்குடி, புலால் உணவு, தாசியிடம் உறவு போன்ற தீயவொழுக்கங்கள் அனைத்திற்கும் அவன் உறைவிடமானான்.

ஒரு நாள் பெரும் பொருளைக் கொள்ளையடித்துக்கொண்டு, கள்மொந்தை சுமந்து, ஒரு தாசியுடன் வந்தான். துறவியின் அருகிலேயே கள்ளுண்டு, புலாலுண்டு, தாசியோடு கொஞ்சி உறவாடினான்.

துறவியின் அருட்பார்வை அவன் மீது விழுந்தது. துறவி தியானத்தில் இருந்து எழுந்தார். அந்த மாபாதகனின் கால்களில் வீழ்ந்து.

'பெருந்துறவியே உன்னை வணங்குகிறேன்'' என்று பணிவாகச் சொன்னார்.

மாபாதகன் திடுக்கிட்டான். யாருக்கும் மனமும் மனசாட்சியும் உண்டல்லவா! அவன் உடம்பும், உள்ளமும், உணர்வும் பதறின.

'முனிவரே! என்ன காரியம் செய்தீர்கள்? நான் கள்வன்; தீயேன், பேயேன், நாயேன். நாட்டில்கூட எல்லோரும் என்னை இகழ்வார்கள். அதனால்தான் இவளுடன் இங்கு வந்து மனம்போல வாழ்கிறேன். இப்படிப்பட்ட கேடனான என்னைப் பெருந்துறவி என்றீர்கள். அதுமட்டுமல்லாது, என் கால்களில் விழுந்து வணங்கினீர்கள்; இது முறையா? தாங்கள் பெரியவர், நான் சிறியவன்; தாங்கள் பிரமஞானி; நான் அஞ்ஞானி' என்று மெய் சிலிர்க்கக் கூறினான் அக் கள்வன்.

'அன்பனே! உண்மையிலேயே நீ என்னை விடப் பெருந்துறவி தான்'

'நானா! சுவாமி என்ன சொல்கிறீர்கள்! இதுவரை எதையுமே துறக்காதவன் சுவாமி நான்.'

''இல்லை அப்பனே! நீ துறந்தவன்தான்; பெரிய துறவிதான். கடுகளவு இன்பத்தைத் துறந்தவன் நான். நீயோ மலையளவு இன்பத்தைத் துறந்தவன். எனவே, நீ பெரிய துறவிதான்''

'சுவாமி! அடியேனுக்கு ஒன்றும் புரியவில்லையே'

'அன்பனே! நான் விவரமாகச் சொல்கிறேன், கேள். பொன்னாலும், பொருளாலும், பெண்ணாலும் வருகின்ற உலக இன்பம் கடுகளவு; இறைவனுடன் ஆன்மா சேர்வதால் வருகின்ற இன்பம் பேரின்பம்; அது மலையளவு. நான் உலக இன்பமாகிய கடுகளவு இன்பத்தைத் துறந்தவன். நீயோ பிரம்மத்துடன் சேர்ந்து நுகர்கின்ற மலையளவு இன்பத்தைத் துறந்தவன். ஆதலால் நீ தானே பெரிய துறவி. நான் துறந்தது கடுகு; நீ துறந்தது மலை. எனவே உன்னை நான் பெரிய துறவியென்று மதித்து வணங்குகிறேன்.''

அந்த மாபாதகன் உண்மையை உணர்ந்தான். 'ஐயோ! என்ன அறியாமை! இறையின்பமாகிய மலையளவு இன்பத்தைத் துறந்து சிற்றின்பமாகிய தினைத்துணையின்பத்தைப் பற்றி அலைந்தேனே!' என்று பலவாறு புலம்பித் துறவியின் காலடியில் வீழ்ந்தான்.

மாபாதகனுக்கும் ஞானம் பிறந்தது. நடுக்காட்டில் வாழ்ந்த துறவி, இந்த மாபாதகன்பால் அருட்பாலித்து இவனின் பக்குவ நிலைக்கேற்ப உபதேசித்து இவனை நல்வழிப்படுத்தினார். எத்தகைய தொண்டிலும் இத்தொண்டே மிகச் சிறந்தது.

இத்தொண்டு, துறவிகட்கு மட்டுமல்ல இறைவனே மானிடப் பிறவியெடுத்து உபதேசித்த நிகழ்ச்சிகள் எத்தனையோ உள்ளன.

இத்தகைய நிகழ்ச்சிகளில் ஒன்றுதான்- 'யவக்கிரீதன் தவம்'

கங்காதீரத்தில் பரத்வாஜர், ரைப்யர் என்கிற இரு ரிசிகளின் ஆசிரமம் அமைந்திருந்தது. இருவரும் நெருங்கிய நண்பர்கள். ரைப்யரின் குமாரர்கள் பராவசு, அர்வாவசு ஆகிய இருவரும் நன்றாக வேதங்களைப் படித்து பெரிய வித்வான்களாகப் புகழ்பெற்றார்கள். மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றுச் சிறந்து வாழ்ந்தார்கள்.

இதைக்கண்ட பரத்வாஜரின் மகன் யவக்கிரீதனுக்குப் பொறாமை ஏற்பட்டது. அவர்களைவிட அதிகம் படித்து மக்களிடையே அதிகமான செல்வாக்கைப் பெற வேண்டும் என்று நினைத்தான். வேதங்களை ஓதினான். யவக்கிரீதனால் வேதங்களைக் கற்கமுடியவில்லை. இந்தக் குறையைப் போக்கிக் கொள்ள இந்திரனை நோக்கித் தவம் இருந்தான். தன்னைத் தானே வருத்திக் கொண்டான்.

ஒரு மனிதன் தன்னைத்தானே வருத்திக் கொண்டால் அது தேவர்களைத் துன்புறுத்தும். அவர்கள் ஓடோடி வந்து குறைகளைக் களைவார்கள்.

யவக்கிரீதனின் கடுந்தவத்தைக் கண்ட இந்திரன் அங்கு வந்து, 'அன்பனே! ஏன் இந்த கோரமான தவம்!' என்றார்.

'சுவாமி! யாரும் அடைந்திராத வேதப் பயிற்சி எல்லாம் எனக்கு வாய்க்க வேண்டும். நான் பெரிய குருவாக வேண்டும். அதற்காக இந்தத் தவம் செய்கிறேன். குருவின் வாயால் நீண்ட காலம் ஓதிக் கஷ்டப்பட்டு வேதங்களை அடைய வேண்டியதாயிருக்கிறது. அப்படியல்லாமல் குருவின்றி அடைந்திட நான் தவம் செய்கிறேன். எனக்கு அருள் புரிய வேண்டும்' என்றான் யவக்கிரீதன்

இந்திரன் நகைத்தான்.

'யவக்கிரீதா! நீ வழியில்லாத வழியில் ஊருக்குச் செல்லுகிறாய், திரும்பிப் போய்த் தகுந்த குருவை நாடிக் கற்பாயாக. படிப்புக்கு வழி தவமல்ல, படிப்புக்கு வழி படிப்பேயாகும்' என்று சொல்லி இந்திரன் மறைந்தார்.

யவக்கிரீதன் விடவில்லை. மேலும் கோரமான முறையில் தவம் புரியத்தொடங்கினான்.

இந்திரனைத் துதித்தான்.

''இந்திரனே! என் விருப்பத்தை ஏற்று எனக்கு அருள்புரியாமல் போனால், என்னுடைய அங்கங்களை ஒவ்வொன்றாக வெட்டி நெருப்பில் போட்டு வேள்வி செய்வேன். நான் விடுவதில்லை' என்று சூளுரைத்துத் தவம் புரிய ஆரம்பித்தான்.

இவனுடைய கடுமையான தவத்தால் தேவர்களுக்குத் துன்பமேற்பட்டது. எல்லோரும் இந்திரனை வேண்டினார்கள்.

யவக்கிரீதன் நாள் குறித்தான்; நெருப்புக் குண்டம் வளர்த்துத் தன் அங்கங்களை வெட்டி போடத் தயாரானான். இந்தக் கோரமான கடுந்தவத்தைத் தொடங்குவதற்கு முன்பாக கங்கையில் நீராடச் சென்றான்.

அங்கே மிகவும் நோய்வாய்ப்பட்டு மெலிந்திருந்த ஒரு முதியவன், கங்கைக் கரையில் உட்கார்ந்து கொண்டு பிடிப்பிடியாக மணலை எடுத்துத் தண்ணீரில் போட்டுக்கொண்டிருந்தான்.

'என்ன செய்கிறாய் கிழவா!' என்று யவக்கிரீதன் கேட்டான்.

'கங்கையைத் தாண்டப் பாலம் ஒன்று கட்டுகிறேன். இங்கே நதிக்குக் குறுக்காக ஒரு மணற்பாலம் கட்டிவிட்டால் அனைவருக்கும் கங்கையைக் கடக்க வசதியாக இருக்குமல்லவா' என்றான் கிழவன்.

யவக்கிரீதன் உரக்கச் சிரித்தான. 'ஓடும் ஆற்றை இம்மாதிரி தடுத்துப் பாலத்தை உண்டாக்க முடியாது கிழவனே! எழுந்து வேறு வேலை பார்! என்றான்.

'ஐயனே! தாங்கள் படிக்காமலேயே வேதங்களை அடையப் பெரும் தவம் செய்யும் போது, என்னால் மணற்பாலம் கட்டமுடியாதா!' என்று கிழவன் பளிச்சென்று கேட்டான்.

யவக்கிரீதன் திகைத்தான். தன் மனதில் சொல்லால் சூடுபோட்ட அந்தக் கிழவன் யார் என்று உற்று நோக்கினான்.

தெளிவாகத் தெரிந்தது.

இந்திரன் தான் அக் கிழவனாக வந்து பக்குவமான முறையில் உபதேசச் செய்திருக்கிறார்.

'சுவாமி படிக்காமலேயே வேதங்கள் அனைத்தையும் அடையப் பார்ப்பது எவ்வளவு அறிவீனம் என்பதை உணர்ந்துவிட்டேன். படிப்பிற்கு வழி படிப்பே யாகும் என்பதை அறிந்து கொண்டேன். எனக்கு அருள் புரிக' என்று கீழே விழுந்து வணங்கினான்.

'ஐயனே! தகுந்த குருவை நாடி வேதங்களைக் கற்பாயாக! பார் புகழ் பெற்றுச் சிறப்பாயாக' என்று இந்திரன் வரம் தந்துமறைந்தார்.

பின்னாளில் மிகப் புகழ் பெற்ற மாமுனிவனாகத் திகழ்ந்தான் யவக்கிரீதன்.

இப்படி இந்திரன் கடை பிடித்த வழியைத் தான் நமது எத்தனையோ மகான்களும், மாமுனிகளும் தம்மைப் பின்பற்றி வந்தடைந்தோர்களுக்கு, அவர்களின் நிலைக்கேற்ப உபதேசித்து நல்வழிப்படுத்தி வந்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து உய்வோமாக.

ஞான விதை :

'படிப்புக்கு வழி தவமல்ல;
படிப்புக்கு வழி படிப்பேயாகும்''.

உள்ளக்கிழியில் உரு எழுது!

சித்தாந்த சிகாமணி இராஜசேகரன்

இறைவனுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?

இறைவன் இவ்வுலகத் துன்பங்கள், நோய் பசி அனைத்தும் தீர்ப்பான் என்றும், பிறப்பு, இறப்புக்குக் கூட அஞ்ச வேண்டாம் என்றும், அனைத்து இன்பங்களும்-ஏன் சுவர்க்க போகமும் தருவான் என்கிறீர்கள்! இவ்வளவும் தரும் இறைவனுக்கு நான் ஏதும்செய்ய வேண்டாமா?

அவன் தந்த உடலைக் கொண்டு அவனை வணங்க வேண்டும்

இது கூடவா நான் சொல்ல வேண்டும்? என்னப்பா? வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், வணங்கத் தலையும் கொடுத்தவனே அவன் தானே! அவற்றையெல்லாம் அவனைத் துதிக்க பயன்படுத்த வேண்டாமா! (5-890) தலையே! நம் தலைவனை வணங்கு. கண்காள்! நஞ்சுண்ட கண்டனைக் காண்மின்கள்! செவிகாள்! சிவ பெருமான் திறம் கேண்மின்கள். வாயே! கூத்தாடும் பிரானை வாழ்த்திப்பாடு நெஞ்சே. மங்கை மணாளனை நினை. கைகாள் பரமனை கூப்பித் தொழு! இறைவன் திருக்கோயிலை வலம் வராத உடம்பின் பயன்தான் என்ன? அவன் திருக்கோயிலுக்குச் செல்லாத கால்களால்தான் என்ன பயன்?

''ஆக்கையால் பயன் என்?—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத
இவ்
ஆக்கையால் பயன் என்? (4.89)

(ஆக்கை—உடம்பு)

ஆம், ஆம், நீங்கள் சொல்வது சரிதான்.

கருவுற்ற நாள் முதலாக இறை சிந்தனை வேண்டும்

அவசரப் படாதே, கருவாய்க் கிடக்கும் பொழுதே இறைவன் திருவடிச் சிந்தனை இருக்க வேண்டும். கருவுற்ற நாள் முதல் இறைவன் பாதம் காண்பதற்காக உள்ளம் உருக வேண்டும்.

'கருவுற்ற நாள் முதலாக உன்பாதமே
காண்பதற்கு
உருகிற்று என் உள்ளம்,'' (4.961)

உண்ணும் போதும், உறங்கும் போதும் எப்போதும் நினைக்க வேண்டும்

அது மட்டும் அல்ல, உண்ணும் போதும், பட்டினியால் இருக்கும் போதும், நோயிலும், தூக்கத்திலும், ஐம்புலன்களின் நுகர்ச்சியில் மயங்கி இருக்கும் பொழுதும் இறைவனை மறக்கக் கூடாது. (4.928) எம தூதர் வந்து உன்னை அழைக்கும் பொழுதும் அவனை மறத்தல் ஆகாது. (4.931) ஏன்? இன்னும் சொல்லப் போனால் உடம்பில் உயிர் உயிர்த்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் சிவமாகவே இருக்க வேண்டும். அப்படி இருக்கின்ற காலம் தான் 'களவு படாத காலம், ஏனைய காலம் எல்லாம் களவு பட்ட காலம்' ஆகும்.

'ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம்
நான் நிலாவி இருப்பன் என்நாதனை' (5.5)

புழுவாய்ப் பிறக்கினும் வழுவாது இருக்க வேண்டும்

இன்னும் சொல்லப் போனால் புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியன் திருவடி வழுவாதிருக்கும் வன்மை பெற்றிருக்க வேண்டும் (4.920)

பிறந்தது முதல் சாகும் வரை இறைவனையே நினைக்க வேண்டும் என்கிறீர்கள் அவ்வளவுதானே!

வஞ்சனை இல்லாத சிந்தனை வேண்டும்

என்னப்பா? எப்பொழுதும் உனக்கு ஒரு அவசரம். மனம் கறுத்து நினையாதே! இறைவனை வஞ்சனை மனத்தனாய் வணங்காதே! கொடிய சொல் விலக்கு. மனம் நைந்து போகும் அளவு உருகி நினை! (5.310)

சிந்தனை மாறுபாடாக இருந்தாலும், மாறுபாட்டை நீக்கிச் செம்மை செய்து சிவானந்த அனுபவமாகிய தேனைப் பருகி, நெஞ்சுருகி மனம் நைபவர்க்கு ஊனம் ஏதும்இல்லை.

'திருகு சிந்தையைத் தீர்த்துச் செம்மை செய்து
பருகி ஊறலைப் பற்றிப் பதமறிந்து
உருகி நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே.''
(5.307)

இறைவனை ஏமாற்றாதே

வஞ்சனையாளர், திருகு சிந்தையாளர், பொய்ம்மையாளர் பூவும், நீரும் கொண்டு வழிபட்டால், சிவபெருமானே இப்படியும் மனிதர்கள் ஏமாற்றுகின்றார்களே' என்று நாணம் வந்து சிரித்து நிற்பான்.

'நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே' (5.892)
(பொக்கம்—பொய்)

ஓகோ! வஞ்சனை, பொய்ம்மை இவையெல்லாம் போக வேண்டுமா?

ஆம், அப்பனே! வீட்டிற்கு விருந்தாளி வந்தால் வீட்டைத் தூய்மை செய்ய மாட்டாயா! உனது நெஞ்சில் குடிபுக இறைவனே வரும்பொழுது நெஞ்சு தூய்மையாக இருக்க வேண்டாமா?

இது போதுமா ஐயா? இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமா?

இறைவனிடம் ஆர்வம் காட்டு

ஏம்பா! உன் இல்லத்திற்கு விருந்தினர் வந்தால் தூய்மை செய்வதோடு நிற்பாயா? நல்ல நாற்காலிகள், மலர் அலங்காரம் இவையெல்லாம் செய்ய மாட்டாயா? அதுபோல் உன் நெஞ்சிலே இறைவன் எழுந்தருள வேண்டுமானால் அவன் மேல் ஆர்வம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

'அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை
உனக்கே தந்து''(4.733)

உயிரான திரியில் ஞானத்தீ இட்டால் இறைவனைக் காணலாம்

உடம்பே வீடு; உள்ளமே அகல்; உணர்வே நெய்; உயிரே திரி; ஞானமே தீ, உயிரான திரியில் ஞானமாகிய தீயிட்டால் சிவமான பொருளைக் காணலாம்.

'உடம்பெனும் மனையகத்து உள்ளமே
தகளியாக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிரெனும்
திரிமயக்கி
உடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து
நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே'

(தகளி—அகல்; கடம்பமர் காளை—கடம்பு மாலை அணிந்த முருகன்)

இறைவனிடம் நேயம் செலுத்து

வீடு என்ன? உடம்பு கூட கோயிலாக மாறும் அப்பனே! மனம் இறைவனுக்குஅடிமையாக வேண்டும். வாய்மையே தூய்மையாக வேண்டும். வாய்மை இருந்தால் அவாவின்மை தானே வரும். எனவே அவாவின்மையே தூய்மையாகும்.

''தூஉய்மை என்பது அவாவின்மை மற்றுஅது
வாஅய்மை வேண்ட வரும்''—குறள் 364.

அன்பாகிய நெய்யும் பாலும் கொண்டு மனமணி இலிங்கமாக நிறைய நீராட்ட வேண்டும்.

''காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறைய நீர்அமைய
ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக்
காட்டினோமே' (4.739)

வீடு, கோயில் என்று தெரிந்த விஷயங்களை வைத்துக் கொண்டு பெரிய தத்துவம் சொல்கின்றீர்களே! மிகவும்சிறப்பாக உள்ளதே!

மெய்மையாம் உழவைச் செய்தால் சிவகதி விளையும்

உன்னிடம் நிலம் இருக்கின்றது அல்லவா!
ஆம்.
அதில் உழுது, களை எடுத்து பயிரே
செய்யலாம்.
நீங்கள் என்ன செய்வது? நானே
செய்கின்றேனே.
இது சாதாரண உழவு இல்லை அப்பனே!
மெய்ம்மையாம் உழவு.

ஆம். மெய்ந்நெறியாகிய ஞானமாம் உழவைச் செய்து, விருப்பு எனும் விதையை விதைத்து, பொய்யாகிய களையை எடுத்து, பொறுமை எனும் நீரைப் பாய்ச்சி, உழவு எனும் வேலி இட்டால் சிவகதி எனும் பயிர் விளையும்.

'மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும்வித்தைவித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு கதவு எனும்
வேலியிட்டு
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையும்
அன்றே' (4.737)

(தகவு-நற்குணம்; இங்கு திருவைந்தெழுத்து, திருநீறு, உருத்திராக்கம் முதலான சிவ அடையாளங்கள்; இவையே வேலி ஆகும்)

உணர்வுக் கயிற்றால் கடைமின்

அது மட்டும் அல்ல: உறவுக் கோலை நட்டு உணர்வு என்னும் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைந்தால் இறைவன் முன்நின்று அருளுவன்,

'உறவுக்கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே'(5.893)

அட! அஞ்சியாகிலும், அன்புபட்டாகிலும் நெஞ்சம் வாழி நினை. (5.233) வைமின்! நெஞ்சத்தை இறைவனுக்கு இடமாக வைமின்! ஒன்றியிருந்து நினை. உள்ளத்துள்ளே இறைவனை இழைத்து வைமின். (5.159)

மனம் ஒன்றுபட்டு தியானம் செய்

உயிர்ப்பு இயங்காதபடி மனம் ஒன்றுபட்டுத் தியானித்து, உள்ளமாகிய படத்தில் இறைவனது உரு எழுதி, உயிரை நான் உனக்கு அடிமை என்ற ஓலையில் எழுதித் தந்தால் உணரப்படுவான்.

'உயிராவணம் இருந்து உற்றுநோக்கி
உள்ளக் கிழியின் உரு எழுதி
உயிர் ஆவணம் செய்திட்டு உன்கைதந்தால்
உணரப்படுவார்' (6.252)

(உயிராவணம் - உயிர்ப்பு இயங்காதபடி; கிழி-படம்; துணி; ஆவணம்-அடிமை ஓலை)

சிவபூசையில் இறைவனை மந்திரமாக வெளிக் கொணர்ந்து ஆவாகனம் செய்தல்

நம் உடம்பிற்குள் பிராணனாய், வெளி வந்து, மீண்டும் உள்ளே சென்று, உள்ளத்திற் குள்ளே ஈசன் நிலைத்து நிற்பான். சிவ பூசையின் போது உள்ளத்தில் வீற்றிருக்கும் இறைவனை வெளியில் மந்திர பூர்வமாக வெளிக் கொணர்ந்து ஆவாகனம் செய்து மீண்டும் தனக்குள் ஒடுக்கும் நிலை இது.

'என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசன்' (5.205)

அப்பா! உள்ளத்தில் இறைவனைக் கொண்டு வர இத்தனை வழியா? வேறுவழிகள் இருக்கின்றனவா?

இதர வழிகள்

சைவாகம விதிப்படி செம்மையாக வழிபடலாம்; தவம் செய்திடலாம்; ஞானத்தால் தொழலாம்,

சைவ ஆகமம். ஞானம் என்றெல்லாம் அந்த அளவுக்கு எனக்கு அறிவில்லை ஐயா!

அஞ்செழுத்து ஓதினாலே போதும்

அப்படியா? 'நமச்சிவாய' எனும் அஞ்செழுத்தை ஓதி உணர்ந்தாலே போதும்.

''ஏதும் ஒன்றும் அறிவிலராயினும்
ஓதி அஞ்செழுத்தும் உணர்வார்கட்குப்
பேதமின்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர் மாற்பேறரே'(5.602)

துன்பம் வருவது ஏன்?

கஷ்டம் இருகாரணங்களினால் உண்டாகிறது. முற்பிறவிப்பயன், இப்பிறவியில் செய்த செயல் இவற்றால்தான் கஷ்டங்கள் வருகின்றன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். கஷ்டத்தைக் கண்டுகவலைப் படுவதால், கஷ்டம் எக்காரணத்தைக் கொண்டும் எவ்வழியிலும் நீங்காது.

கவலைப்படுவதால், நரம்புத்தளர்ச்சி, ரத்தம் கெட்டு அது சம்பந்தமான பல நோய்கள்தான் வரும்.

— ஸ்ரீரங்க சித்தர்

அது மட்டுமா! ஆடுமின்; அழுமின்; தொழுமின்; ஈசன் அடி பாடுமின்; பரமன் பயிலுமிடம் கூடுமின். (5.637)

இறைவனுக்குப் பணி செய்மின்

அட! இறைவனுக்குப் பணி செய்யக் கூடாதா? ஆனால் அதிலுமொன்று உள்ளது. கடனுக்கு என்று செய்யக் கூடாது. ஈசன் பணியை வல்லமை உடையதாகச் செய்; பக்தியோடு செய்; மீளா அடிமையாய்ச் செய்; வீணாக வாதித்துக் காலம் போக்காது செய்; இறைவன் புகழ்தனை மீளச் சொல்லிக் கொண்டு செய்; நிலைத்து அவனிடமே தங்கி நின்றுவிடாது பணி செய்; அவனுடன் இரண்டறக் கலந்து இருந்து செய்; மனமொழி மெய்களால் தாழ்ந்து பணி செய்:

வல்லையாய்,
பக்தியாய்,
பட்டியாய்,
வாதியாய்,
நீட்டி,
தங்கி,
பூணியாய்ப்
பற்றி,
புல்லி,
உண்டு,
தாழ்ந்து பணிசெய் மடநெஞ்சமே!
(5.33 பதிகம்)

(பட்டி-மீளா அடிமை; வாதியாய்-வீணாக வாதிக்காது; நீட்டி-புகழ்தனை நீளச் சொல்லிக் கொண்டு; பூணியாய்-அன்புடையனாய்)

(ஒரு அலுவலகத்திலோ, ஒரு இடத்திலோ வேலை செய்பவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் இதே செயல் முறைகளைப் பயன் படுத்திக் கொள்ளலாம்)

(பணி செய்வதில் இத்தனை கெடிபிடியா! ஏ அப்பா;)

பூவும் நீரும் போதும்

உடம்பு வளைந்து வேலை செய்யமுடியாதா? விடு. பூவும், நீரும் உனக்கு எளிமையாக கிடைக்கும் அல்லவா! அதுபோதும். புண்ணியம் செய்வார்க்குப் பூ உண்டு. நீருண்டு. 'இட்டுக் கொள்வன பூவுள நீருள'. (5.899)

நினைத்தாலே போதும்

அட! அதுவும் சிரமம் என்கிறாயா! வீட்டை விட்டு வெளியே வரமுடியாமல் படுக்கையில் இருக்கிறாயா? கவலைப் படாதே! நினைத்தாலே போதும். உன்மனதைக் கோயிலாகக் கொள்வான்.

'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்' (5.12)

'அகமலாற் கோயில் இல்லை' (4.401)

பூவும், நீரும் மட்டும் போதுமா ஐயா! அதற்கு ஒன்றும் முறை கிடையாதா?

முறையான வழிபாடு

நீ கேட்டாயே என்ற எளிமையாகச் சொன்னேன். முறையோடு செய்தால் சிறப்புதான்! தினமும் இறைவன் திருக்கோயிலுக்குப் பொழுது புலர்வதற்கு முன் சென்று கூட்டி, நீர்தெளித்து, பூமாலை கட்டி, இறைவன்புகழை பாடி, தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடினால் இறைவன் உன் நெஞ்சில் நிலைத்து இருந்து விடமாட்டானா?

'நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரான் உடைய கோயில்புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்தும் ஆடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே'
(6.312)

விரிவான வழிபாடு

இன்னும்கூட விரிவாகச் சொல்லலாம். நந்தவனம் புகுந்து மரங்கள் ஏறி மலர் பறிக்க வேண்டும்; நிரம்பநீர் சுமந்து அபிடேகம் செய்ய வேண்டும்; நெற்றியில் திருச்சாந்து தீற்றிக் கொள்ள வேண்டும்; சாணநீரால் தெளித்துக் கட்ட வேண்டும்; நெய்யும் பாலும் கொண்டு அபிடேகம் செய்ய வேண்டும்; வெள்ளெருக்குப் பூவைக் கொண்டு தலைமாலையாகிய இண்டை கட்டிச் சூட வேண்டும்; எட்டு உறுப்புகளும் (அட்டாங்கம்) நிலத்தில் படியுமாறு விழுந்து வணங்க வேண்டும்; திருநீறு அணிந்து இருக்க வேண்டும்; குவளை மலர்களைப் பிணைத்துத் திருவடியிலே இட்டு வணங்க வேண்டும்; வெண்சங்கினை வாய் வைத்து ஊத வேண்டும். இப்படியெல்லாம் வழிபட்டால் இங்குற்றேன் என்று இலிங்கத்தில் தோன்றுவான். (5.95-ஆம் பதிகம்)

'செங்கணானும் பிரமனும் தம்உளே
எங்கும் தேடி திரிந்தனர் காண்கிலர்
இங்குற்றேன் என்று லிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணியமூர்த்தியே'
(5.945)

யாருக்குத் துன்பம் இல்லை ?

இராமர் 14 ஆண்டுகள் காட்டில் வனவாசம் இருந்தார். ஸ்ரீ கிருஷ்ணர் பஞ்சபாண்டவருடன் கூடவே இருந்து கஷ்டம் அனுபவித்தார். இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொடுமை செய்தார்கள். பட்டினத்தாரையும் கழுமரம் ஏறச் சொன்னார்கள்.

—ஸ்ரீரங்க சித்தர்

இறைவனைக் காதலி

இன்னும் ஒன்றே ஒன்று சொல்கிறேன். நீ உலகத்தில் வாழ்கிறாய். அதை ஒட்டிச் சொன்னால்தான் உனக்குப் புரியும். வாழ்க்கையில் காதல் என்பது ஆதிகாலம் தொட்டு ஆண், பெண் இருக்கும்வரை இருக்கும் உள்ளஉணர்வு. ஒரு பெண் காதலிக்கிறாள். முதலில் என்ன செய்வாள்? காதலன் பெயர் கேட்பாள்; அவன் யார் என்ன என்ற விவரம் அறிவாள்; அதன் பிறகு அவன் ஊர் கேட்பாள்; அதன் பிறகு அவன் நினைவாகவே பித்தாக இருப்பாள்; அன்னை, தந்தை, சுற்றம், வீடு. சுக போகம் அத்தனையும் விட்டு நீங்குவாள். தன்னையே மறந்து விடுவாள். தனது பெயரும் அழிந்த நிலையிலே இரண்டறக் கலந்து விடுவாள். தனக்கு ஏதும் இல்லாது அவனுக்கே அடிமையாகி விடுவாள். இதே போல நீயும் இறைவனைக் காதலித்து வீடு, சுற்றம் சுக போகம் அத்தனையும் நீத்து இறைவனுடன் கலக்க வேண்டும்.

'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவன்இருக்கும் வண்ணம்கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே
நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே'
(6.258)

நீரினில் நனைந்த நிமலன்

நல்லாசிரியர் வெ. சுந்தரம், பரமக்குடி.

உலகம் இயங்குவது பஞ்சபூதங்களால் தான். அந்த பஞ்ச பூதங்களையும் இயக்கும் உயர் சக்தி ஒன்று உண்டு. அதையே பல்லோரும் பலவிதப் பெயர்களால் அழைத்தும், வழிபட்டும் இன்ப துன்பங்களில் இணைத்தும், போற்றிப் புகழ்ந்தும் விழாக்கள் எடுத்தும் மகிழ்கிறார்கள்.

ஐம்பெரும் நிலைகளில் அரனாகி, அரியாகி அண்ட சராசரம் அனைத்தும் ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐந்தொழில் புரிந்து திருவிளையாடல் புரிகின்றான்.

மானிடர் விளையாட்டு பொருளற்றது. சாமானியமானது. ஈசனின் விளையாட்டோ பொருள் பொதிந்தது. புவிக்குப் பெருமை சேர்ப்பது. காரண காரியத் தொடர்புடையது.

மானிடரை உய்விக்க மண்ணில் ஈசன் புரிந்த விளையாடல்களில் ஒரு சிலவற்றை ஈண்டு சிந்திப்போம்.

உயிரின வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளில் முன்னணியில் நிற்பது நீர். நீரின்றி அமையாது இவ்வுலகு என்பது அனைவரும் அறிந்ததே! நீரினில் நிறைந்து நலம் பாலித்தருளிய நிமலனின் செயல்களில் சில காண்போம்.

1. நீரில் தோற்றம்

சிவபெருமானுக்குரிய ஐந்து முகங்களான தத்புருஷம் (சாம வேதம்) கிழக்கு முகமாகவும், அகோரம் (அதர்வண வேதம்) தெற்கு முகமாகவும், சத்யோஜாதம் (ரிக் வேதம்) மேற்கு முகமாகவும், வாமதேவம் (யசுர் வேதம்) வடக்கு முகமாகவும், ஈசானமுகம் ஊர்த்துவ முகமாகவுமுள்ளது. அவை தேஜோரூபமாகவும் உள்ளன. அத்தோடு ஆறாவது முகமாக அதோ முகமும் காட்டி ஆறு முகங்களிலிருந்தும் நெற்றிக் கண்களின் மூலம் ஆறு பொறிகள் தோற்றுவித்து வாயுவைக் கொண்டு நீரினில் சேர்ப்பிக்கச் செய்தார். கங்கையும் ஆற்றலைப் பொறுக்கமாட்டாமல் சரவணத்தில் சேர்க்க, உமையிடம் சிவனார் நோக்கினார்.

நோக்கல் எனபதும் பார்த்தல் என்பதும் வேறு வேறு பொருள்களாகும். காரண காரியத் தொடர்போடு நலம் நாட்டப் பார்க்கும் பார்வையுள் குறிப்பிட்ட நோக்கம் இருக்கும். அதுவே நோக்கல் ஆகும்.

சீதையும் ராமனும் சந்திக்கும்போது கம்ப நாட்டாழ்வார் 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என்று குறிப்பிடுவார்.

'நான் வந்தது இராவண வதத்தின் நோக்கம்' என ராமன் கண்களால் கூற, 'நான் உடனில்லா விடில் உமது நோக்கம் விரைவில் ஈடேறாதே' என்று சீதை கண்களால் விடை கூறியதாக வியாக்யான கர்த்தாக்கள் கூறுவர்.

நோக்கல் என்றாலே நன்மைகள்நிறைக்க நல்ல நோக்கம் நிறைவேறப் பார்க்கும் அர்த்தமுள்ள பார்வை என்பதாகும்.

பரமன் உமையை நோக்கியதும் சரவணத்தில் தீப்பொறி ஆறும் குழந்தை வடிவாய்த் தோன்றலைக் கண்டாள். காதலுடனே ஆறு குழந்தைகளையும் அணைத்து மகிழ்ந்தாள். முகம் ஆறும் ஒன்றாகி சிவ பாலனாக விளங்கியதும் கந்தனெனப் பெயரிட்டு மனம் நெகிழ்ந்தாள்.

சிரம் ஆறு, கைகள் பனிரெண்டுடன் காட்சியளித்ததைக் கண்டு எல்லோரும் மகிழ்ந்தனர். ஆறுமுகம்—வழிகாட்டும் முகம். ஆறு என்றால் பாதை எனபதும் வழியாகும் என்பதும்தானே! நல்வழிகாட்டும் முகம் என்ற உண்மை விளங்குமாறு ஆறு திருமுகத்துடன் நீரில் தாயின் கரம் பட்டு நிறைவானான் ஸ்கந்தன்.

நீரின்றியமையாது உலகு என்பதுஉணர்த்த நீரின் புனிதம் புரிந்து கொள்ள நீரிலும் இறைவன் நிறைந்துள்ளான் என்பதை விளக்கி, நீரே இவ்வுலகின் ஆதாரம் என உணர்விக்கவும் நீரை உகந்து நீரினில் நிறைந்து நிலத்தினில் உறைந்தான். பின் படை வீடு கொண்டான்.

2. ஆற்று நீரில் கிடந்தான்

டச்சு நாட்டுக் கடல் கொள்ளையர் திருச்செந்தூர் கோயிலைக் கொள்ளையிட்டதோடு மூல விக்ரகத்தையும் சின்னா பின்னப்படுத்தியதோடு ஆறுமுகம் கொண்ட அருள்தரு விக்ரகத்தையும் கப்பலில் கொண்டு சென்றனர்.

திருச்செந்தூர் கோயில் நிர்வாகியும் பக்த சிரோன்மணியுமான வட மலையப்ப பிள்ளை என்பவர் அழுதுபுரண்டு ஆற்றொணா வேதனையில் துவண்டார். இறையுருவைக் காணாத

இவ்வுடல் இருந்தென்ன பயன் என வருந்தினார். மற்றையோரின் வற்புறுத்துதலுக்காக ஒரு வேளை ஆகாரம் உட்கொண்டு கண்ணீரில் நனைந்து கொண்டிருந்தார்.

திருநெல்வேலியில் வடமலையப்பபிள்ளையின் தாயாரான வயதான மூதாட்டி வசித்து வந்தார். தினமும் தாமிரபருணி ஆற்றில் நீராடி, ஆற்றின் நடுவில் நீரினில் உள்ளபாறை ஒன்றை முருகனாக மனத்தில் எண்ணி வழிபட்டு வந்தாள்.

மகனின் கவலையை மாற்றிட மகனிடம் பேச்சுக் கொடுத்தாள்.

'நமக்கோ வேண்டியசெல்வம் இருக்கிறது. ஐம்பொன் சிலை ஒன்றை வடிக்கச் செய்து கோயில் வழிபாட்டிற்குப் பயன்படுத்தலாமே! இதை விட்டு விட்டு வீணாகக் கவலை கொண்டால் ஏது லாபம்!'

'அம்மா, நீங்கள் சொல்வது நியாயம். ஐம்பொன் சிலை வடித்து ஆறுமுகனை வழிபடலாம். ஆனால் மூலவிக்ரகத்தை அமைக்க அதற்கேற்ப பாறைக்கல் கிடைத்து, சிற்பிகள் ஏற்று, ஆகம விதிகள் மாறாமல் அமைத்து பிரதிஷ்டை செய்ய வேண்டுமே! அதற்கென்ன செய்வேன்'?

'இதுக்குத்தானா இவ்வளவு கவலை! தாமிர பரணி ஆற்றுக்குள்ளே ஆறுமுகப் பாறை இருக்கு. அதைக் கொண்டு போய் திருக்கோயிலில் பிரதிஷ்டை செய்ய வேண்டியதுதானே!'

'அம்மாவே தெய்வம் என்பார்கள். நீங்கள் கூறியபடி ஆற்றில் உள்ள அந்தப் பாறையைக் காட்டுங்கள். ஸ்தபதிகளுடன் நானும் கூட வந்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வோம்'.

மறுநாள் கைதேர்ந்த சிற்பிகள் சிலருடன் தாயார் வழிகாட்ட வடமலையப்ப பிள்ளை ஆற்றின் நடுவேயுள்ள பாறையை வந்தடைகின்றார்.

'அதோ தெரிகிறதே முருகன் எடுத்துச் செல்லுங்கள்' என மூதாட்டி கூறுகிறார். மற்றவர் கண்களுக்கு வெறும் பெரிய பாறையாக மட்டுமே தோற்றமளித்தது. தினமும் முருகனை அங்கு கண்டானந்தித்து வழிபட்ட மூதாட்டி மற்றவர்களுக்கு அடையாளம் காட்ட ஒரு கரியினால் பாறை மீது முருகனின் உருவச் சுற்று (அவுட் லைன்) வரைந்தார்கள்.

அதையே ஆதாரமாகக் கொண்டுசிற்பிகள். பாறையினின்றும் முருக விக்ரகம் கண்டார்கள் உருவாக்கப்பட்ட இறையுரு ஆற்றுநீரில் அம்மையார் வழிபட்டதாகும்.

அந்த விக்ரகமே திருச்செந்தூர் கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது.

3. கடல் நீரினில் கிடந்தது

கல் விக்ரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டாலும் காணாமல் போன மூர்த்தங்களைஎண்ணி வடமலையப்ப பிள்ளை ஏங்காத நாளில்லை. நிம்மதியாக தூங்கிய நாளும் குறைவு.

பக்தனின் உள்ளம் பரிதவிக்க விடுவானோ பரமன். ஒரு இரவு, வடமலையப்ப பிள்ளையின் கனவில் முருகன் தோன்றினான்.

'கடல் கொள்ளையர்கள் எடுத்துச் செனறதும் கடலில் கொந்தளிப்பும் சூறாவளியும் ஏற்பட்டது. மக்கள் உயிர் பிழைக்க வேண்டுமானால் கனமான பொருள்களைக் கடலில் வீசிவிடுமாறு மாலுமி கூறினான். இதன்படி கொள்ளையடித்த பொருள்களும், விக்ரகங்களும் கடலில் வீசப்பட்டன'.

'எனவே கடலில்நான் இருக்கிறேன். கடலில் எலுமிச்சம்பழம் மிதக்கும், மேலே கருடன் வட்டமிடும். அந்த இடத்தில் கடலுள் இறங்கினால் விக்ரகங்கள் கிடைக்கும்' என்று இறைவன் கூறினார்.

கண் விழித்த வடமலையப்ப பிள்ளை ஆடினார். ஆனந்தக் கண்ணீர் வடித்தார். அப்போதே கண்டுவிட்டது போல பெருமகிழ்வு கொண்டார். இறையனாரின் கூற்றைச் செயல்படுத்த உள்ளம் துடிதுடிக்க கதிரவன் உதயத்தைக் களிப்போடு காணக் காத்திருந்தார்.

கடல் மூழ்குவதில் தேர்ந்த சிலரோடு படகுகள் மூலம் கடலில் சென்றார். கனவில் இறைவன் உணர்த்திய இடம் தெரிந்தது. நீர் அலைகளின் மேலே எலுமிச்சம்பழ மாலை மிதந்தது. ஆகாயத்தில் கருடன் வட்டமிட்டுக் கொண்டிருந்தது. இடத்தைக் கண்டதால் திடமான மனத்தோடு நீர் மூழ்குபவர்களை நீரில் இறங்கி விக்கிரகங்களைத் தேடச் சொன்னார். தேடினார்கள் பலமுறை, ஆனால் தெய்வத் திருவுரு கிடக்கவே இல்லை.

வடமலையப்பருக்குத் தாங்கொணாத வருத்தம். கனவில் கண்ட அடையாளங்கள் மிகச் சரியாகவுள்ளன. ஆனால் திருஉரு கிடைக்கவில்லையே! ஏன்? சிந்தித்தார். 'நான் இறங்கவில்லை' என்பதை உணர்ந்தார். 'நான் எனும் அகந்தையால் மற்றவரை தேடச் சொன்னேன். நான் நீரில் இறங்கவில்லை அதுதான் காரணமாகும்' என்று உணர்ந்தார். தாமே கடல் நீரில் இறங்கினார்.

முதலில் கிடைத்ததோ நடராஜர் திருஉரு: படகில் அதைக் கிடத்தியபின் மீண்டும் இறங்கினார். ஆறுமுகன் கிடைத்தான்.

4. கடல் நீரில் கிடந்த ஆறுமுகனையும் நடராஜரையும் தமது கண்ணீரால் நீராட்டினார்

கடல் நீரினுள் நீர் வாழ் உயிரினங்கள், மீன்கள் முத்தமிட்டு முத்தமிட்டு விக்ரகங்களில் சிறு சிறு பள்ளங்கள் ஏற்பட்டிருந்தன.

முதலில் ஆறுமுகன் சிலை கிடைத்திருந்தால் மகிழ்வோடு திரும்பியிருப்பார்கள்.

திருநள்ளாறு திருக்கோயிலில் களவாடிச் சென்ற நடராஜர் முதலில் கிடைத்தது. எனவே டச்சுக் கொள்ளையர்கள் இரண்டையும் ஒரே இடத்தில் கடலுள் ஆழ்த்தியதால். 'ஒரு கால் நினைக்கின் இருகாலும் தோன்றும்' என்பது போல ஒரு விக்ரகத்தைத் தேட இரண்டும் கிடைத்தன.

இன்றும் அந்த நடராஜர் சிலையில் 'திருநள்ளாறு நடராஜர் சிலை' என எழுதப்பட்டு திருச்செந்தூரில் உள்ளதைப் பக்தர்கள் காணலாம்.

இவ்விக்கிரகங்கள் கடல் நீரில் கிடந்து மீன்கள் போன்றவற்றால் தீண்டப் பெற்றுப் பள்ளங்கள் ஏற்பட்டன. ஆகவே அவற்றிற்குச் சந்தனக் காப்பிட்டு முப்போதும் திருமேனி தீண்டுவார்களால் அழகுபடுத்தப்படுகிறது. திருச்செந்தூர் கோயிலில் இன்றும் இந்நிலையில் இவற்றைக் காணலாம்.

1653-ல். இவ்விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பக்தர்களுக்கு அருள் பாலிக்க பன்னிரு கரங்கள் கொண்டும், அவனது பொன்னடி போற்றி வணங்குபவர்களின் துன்பத்தைத் தோள்களில் சுமந்தும் காட்சி தந்து அரசாட்சி புரிகிறான்.

5. வியர்வை நீரில் நிமலன்

தீபாவளி நாளுக்கு மறு நாளாம் பிரதமை முதல் சஷ்டி திதிவரை ஆறுநாட்களும் விரதமிருந்து சூர சம்ஹார' நிகழ்ச்சி நிறைவுற்ற பின்னே கந்தனின் திரு அருள் சேர அதிதிகட்கு அன்னமிட்டு விரதம் நிறைவு செய்வோர் நிரம்பவேயுண்டு.

கந்தர்சஷ்டி 6 நாள் விழாவில் ஐந்தாம் நாள் 'சிக்கல் சிங்கார வேலனை' நேரில் கண்டு தரிசித்தல் மிகச் சிறப்பாகும்.

தாயார் உமையம்மை (வேல் நெடுங்கண் கண்ணி அம்மை) யின் சந்நிதி மண்டபத்தில் சிங்கார வேலன் எழுந்தருளும் காட்சி அற்புதமான காட்சியாகும். தாயின் கருணைமிக்க கூர்வேல் பெற்ற முருகனின் உடலில் வியர்வை முத்துக்கள் காட்சி தரும்.

வள்ளி, தெய்வானையுடன் பளிங்கு மண்டபத்தில் வேலவன் காட்சியளிக்கின்றபோதும் வியர்வையால் முருகன் விளங்க, அர்ச்சகர்கள் மெல்லிய ரோஜா இதழ்களால் ஒற்றி ஒற்றி எடுப்பர்.

வள்ளி, தெய்வானை விக்ரகங்களில் வியர்க்கும் வியர்வையை ரோஜா மலர்களால் ஒற்றி எடுத்தவை விபூதியாகின்றன. இந்த விபூதி பக்தர்கட்குப் பிரசாதமாக வழங்கப் படுகிறது.

கந்தர் சஷ்டி விழாவில் ஐந்தாம் நாள் கந்தன் வள்ளி, தெய்வானை மட்டுமின்றி பளிங்கு மண்டபச்சுவர்கள் கூட வியர்வை நீரில் நிறைவதைக் காணலாம்.

6. எச்சில் நீரில் எம்பெருமான்

திண்ணன் என்ற பெயருடைய வேடன் குடுமித் தேவர் மீது ஆற்றாத அன்பு கொண்டு பொன் முகலி ஆற்று நீரை தன் வாயிலும், மலர்களைத் தனக்குள்ள குடுமியிலும் எடுத்துக் கொண்டு கைகளில் மாமிசத்துடன் வந்து வணங்குவாரே!

ஏற்கனவே சிவகோசரியார் பூசைசெய்த மலர்களைக் காலணி பூண்ட காலால் ஒதுக்கி, வாயில் கொணர்ந்த பொன் முகலி ஆற்றுநீரை அப்படியே லிங்கத்தின் மீது அபிஷேகம் செய்தாரே! எச்சில் நீரைக் கொண்டு திருமஞ்சன நீராட்டு நடத்தி, தன் தலையில் வைத்துக் கொணர்ந்த பூக்களை இறைவனுக்குச் சாற்றி மாமிசத்தைப் படைத்ததை எண்ணிக் கண்ணீர் விட்டுக் கதறுகின்ற சிவகோசாரியார் கனவில் காட்சி கொடுத்து பக்தனின் பக்தியை விளக்கினாரே!

சிவனார் கண்ணில் உதிரப் பெருக்கு ஏற்பட்டபோது, 'தீங்கிழைத்தவர் யார்?' எனச் சுற்றி வந்து பார்த்த திண்ணன் கண்ணில் படாமல் சிவகோசரியாருக்கு அருள் பாலித்தாரே காளத்திநாதர். அவர் சிவகோசரியார் கண்ணீரிலும் திண்ணனின் எச்சில் நீரிலும் உகந்து நனைந்தார்.

திண்ணன் கண்ணில் சிவகோசரியார் பட்டிருந்தால் அப்போதே சிவலோகத்திற்கு திண்ணனால் அனுப்பப்பட்டிருக்கக் கூடும். ஆனால் திண்ணனின் கண்ணில் சிவகோசரியார் படாமல் காத்தது ஈசன் செயலே!

ஈரமுள்ள அன்பின் நிலைக்களம் அவன் உள்ளம். எனவே ஈரமுள்ள நெஞ்சங்களில் என்றும் இருக்கிறான்.

பக்தரின் கண்ணீரில் நனைந்து, பக்தர் துயர்துடைத்து, இதயத்தாமரையில் அன்பால் ஆராதிக்கப்பட்டு 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்தே' பயன் மிகத் தருகின்றான்.

ஐந்தெழுத்தோனே ஆறுமுகனாவான். சரவணத்திலும், ஆற்று நீர், கடல்நீர், வியர்வைநீர், கண்ணீர், எச்சில் நீர் என நீரில் நிறைந்த நிமலனை நாள்தோறும் போற்றி ஈரமான இதயத்துள் அன்பால் அரவணைத்து வேண்டி நலம் பெறலாம்.

கந்தனின் கருணையைக் கைக்கொள்ள சிந்தையில் சிவனையும், சிவாம்சமான ஸ்கந்தனை நிலை நிறுத்தி பூரணப் பொலிவு பெறுவோம். அன்பால் அபிஷேகம் செய்து இன்பங்கள் பெற வேண்டும்.



நற்றமிழ் 'யுவ'ப் புத்தாண்டு நல்வாழ்த்து!!!

புலவரேறு ஆற்காடு ஆ. ஜெ இராமசாமி

வாழ்க இல்லறம்; வளர்க தமிழகம்;
உயர்க வையகம்;
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!
வாழ்க!

(நேரிசை வெண்பா)

நவஆண்டாய்ப் போந்தொளிரும் நல்லயுவ நங்காய்!
அவனிவாழ் ஆருயிர்கள் எல்லாம்-
துவண்டொழியா (து)
என்றென்றும் நன்றாக இன்பமுடன் வாழ்ந்திடுமேல்
பொன்றாப் புகழோங்கும் பார்.

(தரவு கொச்சகக் கலிப்பா)

இளமையழ கினிதொளிர எழினகைநன் முகமலர்ந்தே
உளமுவந்திங் குவகையுடன் வருகைதரும் யுவஅணங்கே!
களமஞ்சுவைக் கரும்பொடுநெல் கதலிகளும் விளைக்கநல்
வளங்கள் பலகொழிக்கவுயர் வழிவகுக்க விழைந்தருளே!

(எழுசீராசிரிய விருத்தம்)

பொற்றொடி நற்றிரு பொற்புறு கைகளில்
பொலிவுற அணிந்திரு கால்களிலே
வெற்றியை முழக்கிடும் முரசொலி எனஅதிர்
விழுமிய சிலம்பணி வேற்கண்ணாய்!
நற்குல யுவதியே! நவயுக நங்காய்!
நானிலம் புகழ்ந்து மகிழ்ந்தென்றும்
நற்றமிழ்க் கலைகள் நனிசிறந் தோங்கவும்
நல்வாழ் வருளி மகிழ்ந்தருளே.

(அறுசீர் விருத்தம்)

எல்லாப் பேறும் பெற்றுய்ய
எண்ணுந் தமிழகத் தாயோடு
நல்ல வேனிற் பருவத்தை
நாடிப் போந்தருள் நவயுவதி;
எல்லா நாட்டு மாந்தர்களும்
இனிதே இணைந்து நலமாக
எல்லாம் வல்ல இறையருளால்
இன்போ டுறைந்திட இசைந்தருளே.

(எழுசீர் விருத்தம்)

பலநல கலைகள் பலப்பல பணிகள்
பல்சுவை ஊணுடை பொருட்களோடு
வலவன் ஏவா வான ஊர்தியும்
வகுத்திட உதவுநன் மின்சாரம்
உலகினில் அதுபோல் உயர்வொடு தாழ்வற
ஒல்லும் வளர்கநல் பலபொருளாய்
நலம்விளை பிளாஸ்டிக் நவயுகயுவதி
நலமாய் வாழ்க பல்லாண்டே!

'யாதும் ஊரே யாவரும் கேளிர்
நன்றும் தீதும் பிறர்தர வாரா''
என்ப தோர்ந்திங் கியாவருங் கூடி
இன்பமாய் வாழ்க பல்லாண்டினிதே!
பொங்கும் மங்களம் வையகம்
எங்கும் பொலிக! பொலிக!

ஸ்ரீபால விநாயகர்

டாக்டர் **தேவகிபிரகாசம்**

மைதல தேசத்திலுள்ள கண்ட நகரத்தை தலைநகராகக் கொண்டு சக்ரபாணி என்றொரு மன்னன் நீதி நெறி தவறாமல் ஆண்டு வந்தான். அவன் மனைவியின் பெயர் உக்கிரை. இம்மன்னன் விநாயகப் பெருமானை நீங்காது வழிபட்டு வந்தான். திருமணமாகியும் நெடு நாட்களாக இவர்களுக்குப்புத்திரப்பேறு கிட்டவில்லை.

மன்னன் தான தருமங்கள் பலவற்றைச் செய்தான். உக்கிரை புத்திர பாக்கியத்துக்காக நோன்புகள் பல நோற்றாள். அதன் பயனாக உக்கிரை கருவுற்றாள். இவர்கள் துரதிருஷ்டம் குழந்தை பிறந்ததும் இறந்துபோனது. இவ்வாறு எத்தனையோ குழந்தைகள் இவர்களுக்குப் பிறந்து இறந்தது.

மன்னனும் மகாராணியும் மனம் கலங்கினர். மன்னன் தமது குல குருவாகிய சவுனக முனிவரைக் கண்டு தனது குறையைச் சொல்விக் கண்ணீர் வடித்தான்.

சவுனக முனிவர் மன்னனிடம் சூரிய விரதம் அனுஷ்டிக்குமாறு கூறினார். அவ்விரதத்தை கடைப்பிடிக்க வேண்டிய வழி முறைகளையும் உக்கிரைக்கு உபதேசித்தார்.

மன்னனும் மகாராணியும் விரதத்தை அனுஷ்டிக்கத் தொடங்கினர். திங்கள் பல தாண்டின.

சூரியனின் அருளால் ஒரு குழந்தை பிறந்தது.

அக்குழந்தை, சிவந்த சடைமுடியையும் மூன்று கண்களையும் ஜொலிக்கும் மேனியையும் பெற்றிருந்ததோடு கரங்களிலும் இரு படைக் கலங்களும் தாங்கப் பெற்றிருந்தன. மன்னன் திகைத்தான். மகாராணி அச்சங் கொண்டாள். அனைவரும் இக்குழந்தையைத் தெய்வீக அம்சம் கொண்டது என்று கூறினர்.

அக்குழந்தை பிறந்த வைபவத்தை மன்னன் கோலாகலமாகக் கொண்டாடினான். பிறந்த நாள் வைபவத்திற்கு எழுந்தருளிய நாரத முனிவர் அக்குழந்தைக்குச்'சிந்து'என்று நாமகரணம் செய்தார். இளமையிலேயே அக்குழந்தை சகலகலா வல்லவனாக விளங்கினான். பத்து வயது ஆவதற்குள் பாரோர் புகழும் பராக்கிரம சாலியானான்.

வீரதீரப் பிரதாபத்தோடு வளர்ந்து வந்த சிந்துவை அசுர குருவான சுக்கிராச்சாரியார், 'சிவபெருமானை எண்ணித் தவமிருந்து அரிய வரங்களையும் பெற்று வருவாயாக' என்று அன்புக் கட்டளை இட்டு அனுக்கிரகித்தார்.

சிந்துவும், குருதேவரை வணங்கி, கானகம் சென்று கொடிய தவம் இருந்து சிவபெருமானினின் பேரருளால் பல அரிய வரங்களைப்பெற்று நாடு திரும்பினான். மன்னன் அவனுக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்தான்.

சிந்துவிற்கு அடுத்திருந்து ஆலோசனை சொல்ல மித்திரன், கவுத்துவன் என்று இரு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர்.

கதம்பாசுரன், கம்பாசுரன், கனலாசுரன், கோலாசுரன் என்னும் நான்கு அசுரர்களும் இம்மன்னனது அணி, தேர், புரவி ஆட்பெரும் படைகளுக்கு உற்ற தளபதிகளாக நியமிக்கப் பட்டனர். அதுபோலவே இவனை எதிர்த்து வந்த கம்பாசுரன், நிசும்பாசுரன், காலாசுரன் பிரகண்டாசுரன், விருத்திகாசுரன் முதலியோர் களையும் வென்று தனது அரசவையிலேயே உரிய பதவிகளைக் கொடுத்தான்.

இவ்வாறு பல அசுர வேந்தர்களுக்கு எல்லாம் தலைவனாக திகழ்ந்த சிந்து, தேவர்களை வெல்லக் கருதினான். ஒரு நாள் சிந்து, தனது பெரும் படைகள் புடை சூழ விண்ணுலகம் சென்று தேவர்களோடு போரிடலானான்.

தேவ லோகத்தவர் சிந்துவிற்கு அஞ்சி ஓடி ஒளிந்தனர். தேவலோகத்தைத் தனது ஆளுகையின் கீழ்க் கொண்டு வந்தான்.

திருமால், இந்திரன், நான்முகன் முதலியோரைச் சிறையிட்டுக் காவலில் வைத்தான். இவ்வாறு வெற்றிகள்பல பெற்ற அசுரவேந்தன் ஆணவத்தால் அறிவை இழந்தான். ஆணவமே உருவானான்.

மமதை தலைக்கேறிய பெருவேந்தன் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், மண்ணுலக மன்னர்களுக்கும் அளவிலாத் துன்பத்தைக் கொடுத்தான்.

சிறைப்பட்ட தேவாதி தேவர்கள் செய்வ தறியாது சிந்தை கலங்கினர். முடிவில் சிந்துவை ஒழிக்க சரியான தீர்மானத்திற்கு வந்தனர். ஸ்ரீகணேசப் பெருமானின் திருநாமத்தைப் போற்றித் துதித்து, சதுர்த்தி விரதத்தையும் மேற்கொண்டனர்.

இவர்களின் பக்திக்குத் திருவுள்ளம் கனிந்த விநாயகப் பெருமானார், சித்தி, புத்தி சமேதராய்-சிங்க வாகனத்தில்எழுந்தளிருனார்.

தேவாதி தேவர்களும், முனிவர்களும் பெருமானின் பாதார விந்தங்களைப் போற்றிப் பணிந்தனர்,

விநாயகப் பெருமான் அன்பர்களைத் திருநோக்கம் செய்து 'அன்பர்களே! அச்சத்தை அகற்றுங்கள். சிந்துவைச் சம்ஹாரம் செய்து உங்களைச் சந்தோஷமுறச்செய்வோம். அதற்காக யாம் உமாதேவியாரின் மணி வயிற்றில் அவதரிப்போம்' என்று திருவாய் மலர்ந்து அந்தர்யாமியானார்.

தேவாதி தேவர்கள் மனம் மகிழ்ந்தனர். மேலும் மேலும் பற்பல நாம கீர்த்தனங்களால் கணேசப் பெருமானைப் போற்றி வணங்கினர்.

தேவர்களைப் போலவே திரிசந்தி என்னும் சேத்திரத்தில் யோக நிஷ்டையில் அமர்ந் திருந்த கௌதமர் முதலிய முனிவர்களும் சிந்துவின் கொடுமைகளுக்கு அஞ்சி நடுங்கினர். அசுரனிடமிருந்து தப்பிப் பிழைக்க அரசனை சிந்தையிலே கொண்டு அருந்தவம் செய்தனர். இவர்களது தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் ரிஷபாரூட மூர்த்தியாக எழுந்தருளினார்.

முனிவர்கள் ஐயனின் பாதங்களைப் பணிந்து 'சுவாமி சிந்துவின் கொடுமைகளுக்கு அஞ்சி வாழும் எங்களுக்கு ஆறுதலாக ஐயன் உமையம்மையோடு இங்கு எழுந்தருளுதல் வேண்டும்' என்று பிரார்த்தித்தனர்.

சிவபெருமானும் அதற்கு இணங்கி உமையோடு அங்கு எழுந்தருளினார். சிவ கணத்தவர்கள் தேவனுக்குப் பொற்கோவில் ஒன்று அமைத்துக் கொடுத்தனர்.

பொற்கோவிலுள் சிவபெருமான் உமா தேவியாருடன் எழுந்தருளினார். முனிவர்கள் மகிழ்ச்சியால் மகேசனை ஆராதனை செய்தனர்.

பெருமான், உமையாளிடம் அத்தலத்திலுள்ள மயூரேச விநாயகரின் ஆலயத்தில் அமர்ந்து விநாயக மந்திரத்தை ஜபிக்குமாறு அன்பு கட்டளையிட்டார்.

விநாயகப் பெருமானார் உமாதேவியாரின் மணி வயிற்றில் எழுந்தருளினார்.

நல்ல சுபயோக சுபமுகூர்த்த வேளையில் அஷ்டதிக்குகளும் ஆனந்திக்க கணேசப் பெருமான் பார்வதி தேவியின் மணி வயிற்றில் அவதரித்தார். பிறந்த உடனே குழந்தையைப் போல் இல்லாமல் பெருமாள் அளவற்ற திருமுகங்களைக் கொண்ட திருத்தோற்றத்தோடு காணப்பட்டார்.

பெருமானின் இப்பேருருவத்தைக் கண்ட உமாதேவியார் அஞ்சி நடுங்கினார். விநாயகப் பெருமானைக் குழந்தை வடிவத்தில் தோற்றமளிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தாள்.

விநாயகன் பெருமானும் உமாதேவியின் வேண்டுகோளை ஏற்று பால கணபதியாக காட்சி அளித்தார்.

விநாயகர் திரு அவதாரம் செய்ததும் அஷ்டதிக்குகளும், விண்ணும் மண்ணும் குளிர்ந்தன. எங்கும் பூ மழை பொழிந்தது. வேதம் முழங்கியது. ஐவகை வாத்யங்கள் இன்பமாக ஒலித்தன. தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் நன்நிமித்தங்கள் பல தோன்ற-சிந்துவிற்கும் அவனைச் சார்ந்த அக்கிரமக்காரர்களுக்கும் பற்பல தீய நிமித்தங்கள் தோன்றலாயின.

நன்நிமித்தங்கள் தோன்றிய தேவாதி தேவர்கள் மனம் மகிழ்ந்து விநாயகப் பெருமானை நினைந்து ஆனந்தக் கூத்தாடினர்.

தீய நிமித்தங்களைக் கண்டவர்களோ அஞ்சி நடுங்கி செய்வதறியாது பிரமித்தனர். சித்தம் குலைந்து பித்தம் பிடித்தவர்போல் தடுமாறினர். சிந்து தூதுவர்களை நாலாபக்கமும் அனுப்பி, இவ்வாறு தனக்குத் தீய நிமித்தங்களை ஏற்படுத்தும் அளவிற்கு, 'எங்கு என்ன அதிசயம் நிகழ்ந்திருக்கிறது?' என்பதனை அறிந்து வருமாறு ஆணையிட்டான்.

ஈரேழு லோகங்களும் சுற்றி அலைந்து தூதுவர் திரிசந்தி என்னும் சேத்திரத்தில் உமாதேவியாருக்கும் பரமேசுரனுக்கும் கணேச மூர்த்தி குழந்தையாக அவதரித்திருப்பதைப் பற்றித் தெரிந்து கொண்டனர். அவர்கள் விரைந்து சென்று தங்களது தலைவனிடம் தாங்கள் திரிசந்தியில் கண்ட காட்சியைப்பற்றி விரிவாகக் கூறினர்.

அவர்கள் மொழிந்தது கேட்டு சிந்து பெரும் பீதியுற்றான். அப்பொழுது விண் வழியாக அசரீரி ஒன்று ஒலித்தது.

'சிந்து ராஜா! உன்னை அழிப்பதற் கென்றே பெருமானார் உமாதேவியாரின் குமாரனாக அவதாரம் செய்துள்ளார்'.

அசரீரி கேட்டு சிந்து அதிசயித்தான். ''என்னை அழிக்கப் பிறந்த அந்த சிசுவைச் சிதைப்பேன்' என்று ஆணவ வார்த்தை அள்ளி வீசிய வண்ணம் ஆர்ப்பரித்து எழுந்தான் சிந்து.

அவனது அமைச்சர்களான மித்திரன், கவுத்துவன் என்ற இருவரும் வேந்தனைத் தடுத்து நிறுத்தி, 'அரசே! பாலகனோடு போர் புரிவது தங்கள் வீரத்திற்கு அழகன்று. அதனால் அப்பிஞ்சு உயிரை வஞ்சனையால் கொன்று விடுவதுதான் உத்தமமான மார்க்கம்' என்று ஆலோசனை கூறினர். சிந்துவும் அதற்குச் சம்மதித்தான்.

சிந்து வேந்தன், மாயையில் வல்ல அவுணர்களை வரவழைத்தான். சங்கரியின் குமாரனான கணேசமூர்த்தியை வஞ்சனையால் கொன்று வருமாறு கட்டளையிட்டான். அசுரர்களும் சிந்துவின் ஆணையைச் சிரமேற்கொண்டு புறப்பட்டனர்.

கிருத்திகாசுரன் என்னும் மாயாவி கழுகு வடிவம் கொண்டான். தமது பெரிய இறகுகளால் மலைகளையும் காடுகளையும் உருட்டிப் புரட்டியவாறு, பேரிரைச்சலுடன் திரிசந்தி சேத்திரத்தை அடைந்தான். தங்கமணித் தொட்டிலில் துயின்று கொண்டிருந்த கணேசப் பெருமானைத் தூக்கிச் சென்றான்.

உமாதேவியாரும், முனிவர்களும் அஞ்சி நடுங்கினர். பூதகணங்கள் விண்ணில் பாய்ந்து அக் கழுகைக் கொல்லப் பலவாறு முயன்று தோற்றனர்.

கணேசமூர்த்தி தமது பிஞ்சு திருக்கரத்தால் கிருத்திகாசுரனைக் கொன்று ஒழித்தார்.

அடுத்துக் கேமாசுரனும், குசலாசுரனும் கணேச மூர்த்தியைக் கொல்லக் கருதித்தங்கள் மாயைகளைத் தொடங்கினர். இருவரும் இரண்டு பெரிய எலிகளாக மாறினர். பூ மலர் தூவியமலர் மஞ்சத்தில் பள்ளிக் கொண்டிருந்த கணேசப் பெருமானின் திருமேனி மீது வந்து வீழ்ந்தனர்.

பெருமானார் பெரும் பூனையாக வடிவம் எடுத்து இரண்டு எலிகளையும் கடித்துக் கொன்றார். அசுரர்களும் இறந்தனர்.

இவ்வாறு மூன்று அசுரர்களும் மடிந்தது கண்டு, குரூராசுரன் என்பவன் மூன்றாம் திங்களில் பெரும் பூனையாக கணேசமூர்த்தி முன்னால் வந்து நின்று உறுமினான். கணேசமூர்த்தி நான்கு மறைகளையும் தியானித்தார். நான்கு மறைகளும் கணேசமூர்த்தி அருளியதற்கு ஏற்ப நாய்கள் உருவம் கொண்டு பூனை வடிவில் வந்த குரூராசுரனைக் கொன்றன.

அடுத்த திங்களில் பலாசுரன் என்பவன் சூழ்ச்சியால் சுந்தர விநாயகரைக் கொல்லக் கருதி முனிகுமாரனைப் போன்ற வேடம்தாங்கி வந்தான்.

அக் கபட வேடதாரி நேராக கணேசமூர்த்தியின் திருமுன் வந்து, அன்போடு விநாயகரைத் தன்னோடு விளையாட வருமாறு அழைத்தான். அக்கொடியவனின் உண்மையான உருவத்தை உணர்ந்த உமையருள் பாலன் அக் கொடிய அரக்கனையும் விளையாட்டிலேயே கொன்றார்.

அதன் பிறகு ஐந்தாம் திங்களில் வியோமாசுரன், திரிசந்தி சேத்திரத்தில் கனிகள் மிகுந்த பெருமரமாக உருமாறி நின்றான். அம்மரத்தின் பக்கமாக கணேசமூர்த்தி சில முனி குமாரர்களுடன் விளையாட வந்தார். முனி குமாரர்களுள் சிலர் அம்மரத்தில் பழுத்துத் தொங்கும் கனிகளைத் தின்றதும் உயிரை இழந்தனர். மற்ற முனிகுமாரர்கள் பயத்தால் நடுங்கினர்.

கணேச மூர்த்தி அம்மரத்திலுள்ள பெரும் துவாரத்தின் வழியாக மரத்துள் நுழைந்தார். அம்மரத்தின் துவாரமானது மூடிக் கொண்டது. முனிகுமாரர்கள் மேலும் பயந்தனர். ஆசிரமத்திற்கு விரைந்து சென்றனர். நடந்த விவரத்தைக் கூறினர்.

உமாதேவியார் உளம் வாடினார். முனிவர்கள் அஞ்சி நடுங்கி செய்வதறியாது திகைத்தனர். அனைவரும் மரம் இருக்கும் இடத்திற்கு வந்தனர்.

விநாயகப் பெருமானார் மரத்துள் இருந்தவாறே அதனை உலுக்கி இரண்டாகப் பிளந்து தூணிலிருந்து நரசிம்மமூர்த்தி தோன்றினாற் போல வெளியே எழுந்தருளி அன்னை சிவகாமி தேவியாரின் அருகே வந்து ஆனந்தப் பெருக்கோடு அமைதியுடன் நின்றார். அன்னையார் கணேச மூர்த்தியை அணைத்து ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார்.

மர வடிவமாக நின்ற வியோமாசுரன் சுய வடிவம் பெற்று மடிந்து வீழ்ந்தான். இறந்த முனி குமாரர்களும் ஸ்ரீகணேசப் பெருமானின் பேரருளால் உயிர் பெற்று எழுந்தனர். அனைவரும் கணேச மூர்த்தியின் அரிய திருவிளையாடல்களைக் கண்டு உள்ளமும் உடலும் பொங்கிப் பூரித்துப் பெருமிதம் பூண்டனர்.

அதன் பிறகு சத மகிஷபட்சிணி என்னும் ஓர் அரக்கி, இந்திராணியைப் போன்ற எழில் வடிவம் கொண்டு, சங்கரியிடம் வந்து அடைக்கலம் புகுந்தாள். தனது பொய்யுரைகளால் தேவியை நம்பச் செய்தாள். சங்கரியோ அரக்கியின் கபட வார்த்தைகளை மெய்யாகக் கொண்டு அடைக்கலம்கொடுத்து ஆதரித்தாள்.

ஒரு நாள் அந்த அரக்கி, கணேசமூர்த்தியைத் தூக்கிக் கொண்டு விண் வழியே சென்றாள். ஸ்ரீகணேசப் பெருமானார் அந்த அரக்கியின் பெரிய காதுகளைத் திருகி, அவளைக் கொன்று சாம்பலாக்கி முன்போல் ஆசிரமத்துள் எழுந்தருளினார்.

அடுத்து ஆமை வடிவம் கொண்டு வந்த கமடாசுரனையும், குதிரை வடிவங்கொண்டு வந்த கற்பாசுரனையும் முறையே சம்ஹாரம் செய்தார் விநாயகப் பெருமான்.

அடுத்து மலைப்பாம்பு உருவிலே வந்த அசகாசுரனையும். சர்ப்பப் பறவையாக வந்த கமலாசுரனையும் வதம் செய்தார்.

இவ்வாறு கணக்கற்ற அசுரர்கள் ஒருவர் பின் ஒருவராக இறந்து ஒழிந்ததும், பன்னிரண்டாம் திங்களன்று, வீமாசுரன் என்பவன் பெரும் வஞ்சனையால் விநாயகரைப் கொல்லப் புறப்பட்டான்.

அக்கொடியவன் தேவதச்சனாக வடிவம் பூண்டான். சலாசுரன், சிலாசுரன் என்னும் இருஅசுரர்களை இருசிலம்புகளாக்கிக் கையிலே தாங்கிக் கொண்டான். எரிமலை போல் புறப்பட்டு விநாயகர் திருமுன் ஏதும் அறியாதவன் போல் வந்து நின்றான் வீமாசுரன்; அச்சிலம்புகளை, கணேச மூர்த்தியின் திருமுன் காணிக்கையாக சமர்ப்பித்துப் பயபக்தியோடு நின்றான்.

கணேசமூர்த்தி இரு சிலம்புகளையும் தமது திருப்பாதங்களிலே அணிந்து கொண்டு ஆனந்த தாண்டவம் ஆடத் தொடங்கினார். அந்த ஆட்டத்தின் அதிர்ச்சியால் சப்தசாகரங்களும் பொங்கி எழுந்தன. சராசரமெல்லாம் ஆடின. முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் பூத கணத்தவர்களும், மற்றுமுள்ளோரும் ஆடினர். விண்ணும் மண்ணும் ஆடின.

கணேச மூர்த்தியின் ஆனந்தக்கூத்தால் காற் சிலம்புகளுக்கு வேதனை மேலிட்டது. தும்பிக்கைவிநாயகர் தமது திருப்பாதத்தை உதறினார். இரு சிலம்புகளும் பாதங்களில் நின்றும் கழன்று வீமாசுரனைத் தாக்கியது. அந்த தாக்குதலினால் வீமாசுரன் மரணம் அடைந்தான். வீழ்ந்த அதிர்ச்சியில் சிலம்புகளாக காணப்பட்ட இரு அசுரர்களும் உருவம் பெற்று உயிர் அற்றுக் கிடந்தனர்.

அடுத்து மதயானை வடிவங்கொண்டு, கணேச மூர்த்தியைக் கொல்ல வந்தான் ஆவிசயன் என்னும் அசுரன். கணேச மூர்த்தி தமது திருக்கரத்திலுள்ள அங்குசத்தால் அக்கொடியவனையும் கொன்றார்.

இவ்வாறு, அடுத்தடுத்து வந்தஅசுரர்களை எல்லாம் தமது தவழும் பருவத்திலேயே சம்ஹாரம் செய்த கணேசமூர்த்தி தளிர் நடை பயிலும், இரண்டாவது வயதுப் பிராயத்தை அடைந்தார்.

அத்தருணத்தில் கணேசமூர்த்தியைக் கொல்லக் கருதிய கூடாசுரன் என்பவன் ஒரு பெரும் சூழ்ச்சி செய்தான். விநாயகப் பெருமானும் மற்ற முனிகுமாரர்களும் விளையாடி மகிழும் ஓர் தாமரை தடாகத்து நீரில் நஞ்சினைக் கலக்கினான்.

அக்கொடிய விஷத்தின் சக்தியால் சுற்றியிருந்த மரஞ்செடி கொடிகள் கருகின. அத்தடாகத்துள் விளையாட வந்த பச்சிளம் முனிகுமாரர்களும் விஷத்திற்குப் பலியாயினர்.

இவற்றையெல்லாம் அறிந்த ஸ்ரீகணேச பெருமானார், தமது அருட்பார்வையால் நஞ்சு கலந்த நீரை அமுதமாக்கினார். இறந்த பாலகர்களை உயிர் பெற்று எழச் செய்தார், காய்ந்து கருகிய செடி கொடிகளை முன்போல் தழைக்கச் செய்தார். விநாயகப் பெருமான் தமது நெற்றிக் கண்ணைத் திறந்து விண்ணில் மறைந்திருந்தகூடாசுரனைச்சாம்பலாக்கினார்.

கணேச பகவான் தமது மூன்றாவது பிராயத்தில், மகர மீனாக வடிவெடுத்து வந்த விகிர்தாசுரனையும், பெரு மலையாக வந்து நின்ற இடும்பாசுரனையும் கூண்டோடு அழித்தார்.

ஸ்ரீ கணேசமூர்த்திக்கு நான்கு வயது பூர்த்தியாயிற்று. ஸ்ரீ விநாயகப் பெருமான் தாமும் சிவபெருமானும் சிவலிங்க சொரூபம் என்பதனை உணர்த்தத் திருவுள்ளம் கொண்டார். ஒரு நாள் உமாதேவியார் சிவலிங்க பூஜையில் ஈடுபட்டிருந்தார்.

பாலவிநாயகர், உமாதேவியார் சிவபெருமானை எந்த வடிவத்தில் தமது சிந்தையில் இருத்தி வழிபடுகிறார்களோ அந்த வடிவில் சிவலிங்க சொரூப மூர்த்தியாக பார்வதிதேவியாருக்கு காட்சி அளித்தார்.

அத்திருக்கோலக் காட்சியைக் கண்டு, பார்வதிதேவியார் விநாயகப் பெருமானைப் பணிந்தார்.

விநாயகர் ஐந்து வயது பிராயத்தைப் பெற்றார். இப்பிராயத்தில் பெருமானார் தம்மைச் சூழ்ச்சியால் கொல்ல வந்த கருத்த

மாசுரன், ஒட்டக வடிவில் வந்த கடகாசுரன், சாயாசுரன், சஞ்சலாசுரன் முதலிய அசுரர்களையும் அழித்தார்.

ஆயர்பாடி கண்ணனைப்போல் அற்புத திருவிளையாடல் புரிந்து வரும் கணேசமூர்த்தி முனிவர்களுடைய ஆசிரமத்திற்குச் சென்று முனிபத்தினிகளிடம் கோபியர்களிடம்கண்ணன் விளையாடியதுபோல் பற்பல வேடிக்கையான திருவிளையாடல்களைப் புரியலானார்.

ஸ்ரீகணேசனின் குறும்பு விளையாட்டால் கோபங் கொண்ட முனிபத்தினிகள், விளையாட்டாகக் கடிந்து கொள்பவர்போல் பாவனை செய்து அவரைப் பிடித்துக் கொண்டு போய் உமாதேவியாரிடம் சேர்ப்பித்தனர். அவரது குறும்புத் தனத்தைச் சுட்டி காட்டி உமாதேவியார் அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார்.

முனிபத்தினிகள் தத்தம் வீட்டிற்குத் திரும்பி வந்தனர். அங்கே அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தது.

விநாயகர் முன்போல் ஒவ்வொருவர் வீட்டினுள்ளும் குறும்பு செய்து விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டனர்.

அவர்களது அகக் கண்கள் திறந்தன. 'ஈரேழு பதினான்கு லோகங்களையும் காத்தருளும் சர்வரட்சகரான ஈசுவரனே இத்தபோவனத்தில் உமாதேவியாரின் குமாரனாக அவதரித்துள்ளார்' என்பதை உணர்ந்தனர்.

ஒவ்வொரு முனிபத்தினியும் கணேசமூர்த்தியை நமஸ்கரித்து, வழிபட்டு அறுசுவைத் தின்பண்டங்களையும் தீஞ்சுவைக் கனிகளையும் நிவேதித்து உளம் குளிர்ந்தனர். கணேசமூர்த்தி ஆசிரமத்துப் பெண்களுக்கு அருள்புரிந்தார்.

ஆனைமுகப் பெருமான் ஆறாம் ஆண்டு பிராயத்தை எய்திய மங்கள நாளன்று மூவுலகங்களும் விழாக் கொண்டாடி மகிழ்ந்தன. தேவர்களும், முனிவர்களும், பூதகணத்தவர்களும் விநாயகரின் திருநாமத்தை ஐவகை வாத்தியங்களோடு கலந்து இசைத்து-துதித்து ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

தேவத் தச்சனான விசுவகர்மா கணேசமூர்த்தியைத் தரிசித்துப் போவதற்காக வந்தான். பரசு, தாமரை, பாசம், அங்குசம் போன்ற படைக்கலங்களை தும்பிக்கை விநாயகரின் திருமுன் வைத்து வணங்கினான்.

'பிரபோ! இப்படைக்கலங்களைத் தேவரீர் திருக்கரங்களில் தாங்கிக் கொள்ள வேண்டும்' என்று பிரார்த்தித்தார்-ஆனைமுகப் பெருமானாரும் அவற்றை ஏற்றுக் கொண்டு, விசுவகர்மாவிற்குத் திருவருள் புரிந்தார்.

இத்தருணத்தில் விருகாசுரன் என்பவன் பயங்கரமான தோற்றத்தோடு கூடிய செந்நாய் உருவோடு விநாயகரை எதிர்த்து வந்தான். விநாயகர் தமது திருக்கரத்திலிருந்த அங்குசத்தால் அந்த அரக்கனை அடியோடு அழித்தார்.

கணேசரது ஏழாவது வயதில் அவரைக் கொல்லக் கருதி யாழி வடிவோடு வந்த கிருதாந்தன், கானன் என்ற இரு அரக்கர்களையும் மற்றொரு ஆயுதத்தால் சம்ஹாரம் செய்தார்.

அதுபோல் முனிகுமாரர்களுக்குத் தொல்லைக் கொடுப்பதற்காகப் பட்சி உருவில் வந்த கிருஷ்ணாசுரனைக் கொன்று வீழ்த்தினார்.

ஒருநாள் காசிபமுனி பத்தினிகளில் ஒருத்தியான வினதை என்பவள், தான் நெடு நாட்களாக பாதுகாத்து வந்த அதிசயமான ஒரு முட்டையைக் கொண்டு வந்து பெருமானது திருமுன் வைத்து வணங்கினாள்.

'தேவரீர்! என் துயர்களைத் துடைத்து திருவருள் புரிதல் வேண்டும்' என்று பணிவன்போடு விண்ணப்பித்தாள்.

விநாயகப் பெருமான் ஒன்றும் புரியாதவர் போல் 'அம்மணி உங்களுக்கு என்ன துன்பம் நேர்ந்தது?' என்று வினவினார்.

'சுவாமி! அடியேன் காசிப முனிவருடைய பத்தினிமார்களில் ஒருத்தியான வினதை. எனக்கும் அவரது மற்றொரு பத்தினியான கத்துரு என்பவளுக்கும் அடிக்கடி சண்டை ஏற்படும்.

ஒரு நாள் கத்துரு என்னை வஞ்சகமாகச் சிறையில் அடைத்தாள். கத்துருவால் எத்தனையோ துன்பங்களை அனுபவித்தேன். ஒரு முறை எனது மாளிகைக்கு வந்த கத்துருவை நான் மதிக்கவில்லை என்று தவறாக எண்ணம் கொண்டாள். அவள் மீது வெறுப்பு கொண்ட எனது புதல்வர்களான சடாயு, சம்பாதி, சேனன் ஆகிய மூவர்களும் அவளை அலட்சியம் செய்தனர்.

இதனால் மேலும் சினமுற்ற கத்துரு, பாதாள லோகத்தில் வசிக்கும் தனது புதல்வர்களான நாகர்களிடம் சொல்லி எனது மூன்று குமாரர்களையும் பாதாள லோகத்தில் சிறை வைத்தாள். புத்திர சோகத்தால் புலம்பினேன். சில மாதங்களுக்குப் பிறகு எனக்குக் குழந்தை பிறப்பதற்குப் பதிலாக இந்த முட்டை பிறந்தது. நான் துடித்தேன்; கதறி அழுதேன்.'

'என் துயரத்தைக் கண்டு என் கணவர்' 'வினதையே வருந்தாதே: எல்லாம் நன்மைக்கே! இந்த முட்டையை விநாயகப் பெருமானது திருவடியில் சமர்ப்பிப்பாயாக: அப்பெருமானது பேரருளால் உன் துயரம் நீங்கும். நம் குமாரர்களும் உன்னிடம் வந்து சேருவர்' என்றார். தேவரீர் எனக்கு அருள் செய்ய வேண்டும்''

இவ்வாறு கண்களில் நீர் மல்க தனது சோகக் கதையை செப்பினாள் வினதை.

கணேசமூர்த்தி தமது திருக்கரத்தால் முட்டையின் மீது கீறினார். அம்முட்டைக்குள் இருந்து பிரம்மாண்டமான தோற்றத்தோடு கூடியமயில் ஒன்று வெளிப்பட்டது. ஆனைமுகப் பெருமானார் அம்மயிலைத் தமக்கு வாகன மாகக் கொண்டார். அதன் மீது எழுந்தருளி னார். மயில்மீது எழுந்தருளிய மயூரேசரின் கமல மலர்ப் பாதங்களை வினதை பணிந் தெழுந்தாள்.

'பெருமானே! பாதாள லோகத்தில் சிறைப்பட்டுக் கிடக்கும் என் செல்வங்களைச் சிறை மீட்டுக் காத்தருள வேண்டும்' என்று வினதை பணிவன்போடு விண்ணப்பித்து நின் றாள்.

அவ்வாறே செய்வோம் என்று திருவாய் மலர்ந்தார் எம்பெருமான்; வினதையும் மன அமைதி பூண்டாள். விநாயகப் பெருமானைத் தியானித்துக் கொண்டே இருந்தாள்.

ஒரு முறை கணேச மூர்த்தி சில முனி குமாரர்களுடன் ஒரு மலர் வனத்திற்குச் சென் றார். அங்குள்ள மலர்த் தடாகத்தில் முனி குமாரர்களுடன் தூய நீராடிக் களித்தார்.

அத்தாமரைத் தடாகத்திற்குத் தோழியர் களுடன் நீராட வந்த நாகராஜனின் மகள், ஸ்ரீ கணேசமூர்த்தியின் ரூபலாவண்யத்தில் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தாள். அவள் கணேசமூர்த்தியின் பாதங்களைப் பணிந்து, 'சுவாமி! தேவரீர் யார் என்பதை யான் அறிய லாமா!' என்று கேட்டாள்.

'மயூரசேனர் என்பது என் நாமம். யாம் உமையொரு பாகரின் புதல்வன்' என்று அமுத மொழி பகர்ந்தார்.

அம்மொழி கேட்டு நாககன்னிகை நெஞ்சு குளிர்ந்தாள். காதலாகி கசிந்து கண் ணீர் மல்கியவாறு 'ஐயனே! நான் புனித மானேன்! நான் நாகராஜனான வாசுகியின் மகள். தேவரீர் இந்த அபலை மீது கருணை கொண்டு, பாதாள லோகத்திற்கு எழுந்தருளி எம்மை ஆட்கொண்டு அருள வேண்டும்' என் றாள்.

பாதாள லோகம் என்று நாக கன்னிகை நவின்றதும் விநாயகருக்கு வினதையின் வேண்டுகோள் நினைவிற்கு வந்தது. அக் கன்னியர்களுடன் பாதாள லோகத்திற்குச் சென்றார்.

பாதாள லோகத்தில், நாகக் கன்னிகையர் அவரை வணங்கி வழிபட்டு பற்பல சிறப்புகளை செய்து அக மகிழ்ந்தனர். அது சமயம் நாக கன்னிகையின் தந்தை. விநாயகரின் சக்தியை யும், கணேசமூர்த்தி இன்னாரென்பதையும் அறியாது அவர் மீது போர் தொடுக்கப் புறப் பட்டான்.

கணேசமூர்த்தி அக்கொடியவனைத் தோற் கடித்து தமது திருவிரலுக்கு ஏற்ற கணையாழி யாக மாற்றி அணிந்து கொண்டார்.

நாகராஜனான வாசுகிக்கு ஏற்பட்ட தோல்வியைப் பற்றிக் கேள்வியுற்ற ஆதிசேடன் பெரும் படையுடன் விநாயகருடன் போருக்கு வந்தான். விநாயகர் தமது வாகனமாகிய மயூரத்தை அனுப்பி, ஆதிசேடனை வென்றார். அவனைத் தமது திரு அரைக்குச் சுற்றிக் கொள் ளத்தக்க அரைநாணாக மாற்றிக் கொண்டார். மற்ற பலநாகங்களையும் பலஅணிகலன்களாகச் செய்து தமது திருமேனியில் விளங்கச் செய்தார் பெருமானார்.

பின்னர் நாகங்களால் சிறையிடப்பட்ட வினதையின் புத்திரர்கள் மூவரையும் சிறை மீட்டார் பெருமானார். அவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அருளினார். அம் மூவரையும் அவர்களின் தாயிடம் கொண்டு சேர்த்தார் பெருமானார்.

இத்தருணத்தில் விநாயகருடன் வந்த முனிகுமாரர்கள் விநாயகப் பெருமானைத் தேடி கொண்டு நாக லோகத்திற்கு வந்தனர்.

அதே சமயத்தில் சிந்து ராஜனால் அனுப் பப்பட்ட கோராசுரன் என்பவனும் கொக்கு வடிவம் எடுத்து விநாயகரைத் தேடிக்கொண்டு நாகலோகத்திற்கு வந்தான்.

கொக்கு வடிவாக வந்த அக்கொடிய அரக் கன் முனிகுமாரர்களை எடுத்து விழுங்கினான். கணேசமூர்த்தி, பாசத்தினால் கொக்காசுரனை இரு கூறாக்கினார். அவனால் விழுங்கப்பட்ட முனிகுமாரர்களையும் உயிரோடு பிழைத்து வரச் செய்தார்.

தொடர்ந்து விநாயகர் தம்மை எதிர்த்து வந்த காரளன் விசாரன் என்னும் இரு அரக்கர் களையும் சம்ஹாரம் செய்தார். அடுத்து புலி வடிவாக வந்த ஊர்த்தனன் என்னும் அசுரனின் காதுகளை அறுத்தார். மூக்கைச் சீவினார்; பற்களை உதிர்த்து எறிந்தார்.

கனலாசுரன் என்பவன் நால்வகைப்படை யோடு விநாயகரை எதிர்த்துக் கடலெனப் பொங்கிப் புறப்பட்டான். திரிசந்தி சேத் திரத்தை அடைந்தான்.

பூதப்படையினர், அசுரச்சேனைகளை எதிர்த்துப் போரிடத் தொடங்கினர். கணேச மூர்த்தி எம்பெருமானால் அளிக்கப்பட்ட சூலாயுதத்தைத் திருக்கரத்திலேயே தாங்கிக் கொண்டு மயில்மீது எழுந்தருளிப் போருக்குப் புறப்பட்டார்.

ஸ்ரீகணேச மூர்த்திக்கும், கனலாசுரனுக்கும் பயங்கரப் போர் மூண்டது. பற்பல மாயைகளினால் விநாயகரோடு போர் செய்தான் கனலாசுரன். விநாயகப் பெருமானார் சூலாயுதத்தினால் அக்கொடியவனைச் சாம்பலாக்கினார்.

கனலாசுரன் மாண்டதும், சிந்துராஜன் நிலை குலைந்தான். தமது அதிகாரத்திற்கு உட்பட்டு ஆட்சி புரியும் பஞ்ச பூதங்கள் இல்லாமற் செய்தான். அவனால் பிரபஞ்சமெங்கும் சூரியன் தோன்றவில்லை. சந்திரன் வரவில்லை. காற்று வீசவில்லை; மழை பொழியவில்லை; அக்னி உண்டாகவில்லை.

இதனால் தேவர்களும் முனிவர்களும் வாடினார்கள். வதங்கினார்கள். பிரபஞ்சமே ஸ்தம்பித்தது.

சிந்துராஜனின் ஆட்சியைத் தெரிந்து கொண்ட கணேச மூர்த்தி, தமது திருவிழி மலரிலிருந்து பஞ்ச பூதங்களைத் தோன்றும்படி செய்து மூவுலகங்களையும் காத்தருளினார். கணேச மூர்த்தி சிந்துராஜனைச் சம்ஹாரம் செய்வதென்று திருவுள்ளம் கொண்டார். நந்திதேவரை, சிந்துராஜனிடம் தூது அனுப்பினார்.

நந்திதேவரின் நல்லுரைகளும், பொன்னுரைகளும் சிந்துராஜன் முன்னால் தோற்றுப் போயின. அழிவின் எல்லைக் கோட்டிற்கு வந்து விட்ட சிந்துராசன் ஆணவத்தால் ஆர்ப்பரித்தான். சமாதானத்திற்குச் செவி சாய்க்கவில்லை. அவன், உடன்பாட்டிற்கு ஒத்து வரவில்லை. போர்தான் முடிவென்று அறிவித்தான் அந்த அவுணர் தலைவன்.

போர்ப் பரணி எழுந்தது. வெற்றி முரசம் முழங்கியது!

சிந்து ராஜனின் படைக்கும், பூத படையினருக்கும் கடுமையான போர் மூண்டது.

முதல் நாள் போரில் கணேச மூர்த்தி சிந்துராஜனின் வில்லை ஒடித்தார்; சூலாயுதத்தைச் சாம்பலாக்கினார். மணி மகுடத்தை மண்ணில் உருளச் செய்தார்.

இரண்டாம் நாள் நடந்த போரில் சிந்துராஜனின் புத்திரர்களின் தலைமையில் வந்த படையை முருகப் பெருமானும், வீரபத்திரரும் நந்திதேவரும் பெரும்படையோடு எதிர்த்தனர். தன்மன், அதன்மன் என்ற இரு சிந்து புத்திரர்கள் செத்து மடிந்தனர். சிந்துராஜன் பெரும் படையோடு போர்க் களத்திற்கு வந்தான். முருகப் பெருமானும், வீரபத்திரரும் அவனைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்தனர்.

மூன்றாம் நாள் போரில் கணேசப் பெருமான் படைக்கலங்கள் தாங்கப் பெற்ற திருக்கரங்களுடன் மயில்மீது ஆரோகணித்துப் போர்க்களத்திற்கு வந்தார்.

சிந்து, பொன் வண்ணத் தேரில் அமர்ந்து போருக்கு வந்தான்.

இருவருக்கும் கடுமையான போர் மூண்டது. சிந்துராஜன் படைக்கலங்களைப் பெருமான் மீது அனல் போல் பொழிந்தான். பெருமான் அவற்றைப் புனல் போல் குளிரச் செய்து தமது சேவடிகளிலே சரணடையச் செய்தார்.

சிந்துராஜன் சக்ராயுதத்தை ஏவினான்' சக்கராயுதமும் கணேச மூர்த்தியை மும்முறை வலம் வந்து அவரது திருவடியில் தஞ்சம் புகுந்தது.

சிந்து ராஜன் ஆவேசத்தோடு முத்தலைச் சூலாயுதத்தை ஏவினான்.

விநாயகர் அதற்கு மேல் அவனை உயிரோடு விட்டு வைக்க விரும்பவில்லை. 'பரசு' என்னும் படைக்கலத்தை அவன்மீது ஏவினார்.

அண்ட சராசரங்களும் அஞ்சி நடுங்கப் புறப்பட்ட 'பரசு' அக்கொடியவன் அனுப்பிய சூலாயுதத்தைத் தூள் தூள் ஆக்கியது.

சிந்துராஜன் அஞ்சினான். பரசு சீறிப் பாய்ந்து அவன் மீது சூறாவளிபோல் புறப்பட்டது. பரசாயுதம் சிந்துராஜனின் மார்பைப் பிளந்து அவனைச் சம்ஹாரம் செய்தது.

மயூரசேனர் வெற்றி பெற்றார். தேவர்களும், முனிவர்களும் விடுதலை பெற்றார்கள்.

எங்கும் பூ மழை பொழிந்தது. கணேசப் பெருமானின் திருநாமம் திக்கெட்டும் முழங்கியது. முரசு ஒலித்தது.

விநாயகர் பெருமான், தமது திருவடிகளில் நீங்காத பற்றுடைய, சிந்துராஜனின் தந்தைக்குச் சகல சௌபாக்கியங்களையும் . நீண்ட ஆயுளையும் அளித்தார். அவனையே நேர்மையுடன் அந்நகரத்தை ஆளுவதற்குப் பேரருள் பாலித்தார்.

இவ்வாறு திருமால், நான்முகன் முதலிய தேவாதி தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் சுபிட்சத்தை அளித்து எங்கும் அருளைப் பாலித்து உய்யும் மார்க்கத்தை உருவாக்கினார் பால விநாயகர்.

அதிசய சாஸ்தா ஆலயம்

தா. காசிநாதன்

பாரதத்தின் தென்கோடியான வரலாற்றுச் சிறப்புமிக்க முக்கடலும் முத்தமிழும் கன்னியாகுமரி மாவட்டத்தில், சுசீந்திரம் அருகே நாகர்கோவில் - கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஆசிராமம் என்னும் சிற்றூரில் 'இந்தியாவின் அதிசய சாஸ்தா' என்று அழைக்கப்படும் ஸ்ரீ அஞ்சனம் எழுதிய கண்டன் சாஸ்தா திருக்கோவில் அமைந்துள்ளது இக்கோவில் தமிழ்நாடு இந்து அறநிலையத்துறையின் நிர்வாகததின் கீழ் உள்ளது.

இங்குள்ள சாஸ்தாவின் திரு உருவம் மற்ற இடங்களில உள்ள சாஸ்தாவின் சிலைகளோடு ஒப்பிடும்போது உருவத்தில் மிகவும் பெரியதாக உள்ளது. இந்த சாஸ்தா ஒரு காலை மட்டும் மடக்கிக் கையை அதன் மேல் வைத்துள்ளார். அந்தக் கையில் கதாயுதம் ஒன்றையும் மற்றொரு காலை மிகவும் வித்தியாசமாக மடக்கியும் வைத்துள்ளார். பொதுவாக சாஸ்தாவின் தலைமுடி சுருள் கேசமாக தோள் பட்டைக்கு கீழே கிடப்பதோடு நடு உச்சியில் கொண்டையும், பூணூல் போட்டிருப்பதும் ஒரு விசேஷமான அம்சமாகும். சிறப்பம்சமாக கழுத்தில் பதக்கமும், இரு கைகளில் கோதண்டராம பதக்கமும், திருநீற்றுப்பட்டையும் அணிந்துள்ளார்.

இத்திருக்கோவில் காலத்தினால் மிகவும் பழமையானதாகும். சுமார் 1000 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று ஊர்ப் பெரியவர்கள் கூறுகிறார்கள். இத்திருக்கோவில் சுசீந்திரம் அருள்மிகு தாணுமாலையன் திருக்கோவில் ஸ்தல வரலாற்றினோடு மிகவும் தொடர்புடையதாகும்.

ஆஸ்ராமம் -பெயர்க் காரணம்

முன்னொரு காலத்தில் சுசீந்திரம் கிராமம் 'ஞானாரண்யம்' என்ற பெயரில் வனமாக இருந்தது. அந்த வனத்தின் ஒரு பகுதியில் ஆஸ்ரமம் அமைத்து வாழ்ந்து வந்தார் அத்திரி மகரிசி. அவருடைய தரும பத்தினிதான் அனுசூயாதேவி. கற்பிற் சிறந்த அனுசூயா தேவியை சோதிக்க எண்ணிய சிவன் பிரம்மா விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும் அத்திரி மகரிசி இல்லாத நேரத்தில் துறவிகள் போல் வேடமணிந்து ஆஸ்ராமத்திற்கு வந்தனர். மூன்று துறவிகளும் அனுசூயாதேவியிடம் பிச்சை கேட்டனர். உடனே தேவியானவர் தன் கணவனின் பாத தீர்த்த சக்தியால் அறுசுவை உணவுகளை அமுதம் போன்று படைத்தாள். அவர்கள் வந்ததும் ஆசனம் இட்டு அமரச் செய்து விருந்தளிக்க தேவி வந்தபோது களங்கமனத்தினராய் இருந்த துறவிகள் மூவரும் திடுக்கிட்டாற் போல் எழுந்து விட்டார்கள். இதைக் கண்டதும் 'என்ன மோசம் செய்தோம், என்ன பிழை செய்தோம்' என வருந்தி தேவியானவள் யாது நேர்ந்தது! என்று துறவிகளிடம் அழுது கேட்டனள். அதற்கு அவர்கள் 'மழையில்லாத காரணத்தால் ஒரு மண்டலம் உணவில்லாமல் வருந்திய நாங்கள் உண்ண வேண்டுமானால் ஒரு நோன்பு உண்டு. அந்நோன்பு முடிந்தாலன்றி உணவு உட்கொள்ளக்கூடா'தென பதில் கூறினர். அதன்படி பிறக்கும்போது எந்த கோலத்துடன் இருந்தனையோ அத்தன்மையில் அன்னம் பரிமாறினால் அருந்துவோம் என வருந்துயரை எண்ணாது உயரிய தேவியிடம் உரைத்தனர். இதைக் கேட்ட தேவி சற்று திகைத்துப் பின் கணவனே கடவுள் என்றும் கற்பே நன்னெறி என்றும் நினைத்து வாழும் யான் எனது கற்பின் பெருமையால் முனிவர்கள் கூறியவாறு அமுது படைப்பேன் எனத் தெளிந்து அனுசூயா தேவி தமது கணவர் காலைக் கழுவி வைத்திருந்த பாததீர்த்தத்தைக் கையில் எடுத்துக் கணவனை மனதில் தியானித்துக்கொண்டு இவர்கள் 'குழந்தையாக மாறக்கடவதென' அத்துறவிகளின் தலையில் தெளித்தனள். ஆக்கல் அழித்தல் காத்தல் ஆகிய முத்தொழிலையும் புரியும் அம் மும்மூர்த்திகளும் கற்புக் களஞ்சியமான இப் பெண்மணியால் பால்மணம் மாறாப் பச்சிளங் குழவியானார்கள்.

பின்பு நிர்வாண நிலையில் அமைந்து உணவூட்டினாள் அன்னை அனுசூயாதேவி. இதைக் கேள்விப்பட்ட முப்பெருந்தேவியர் மூவரும் தங்களுக்கு மாங்கல்யப் பிச்சை அளிக்க வேண்டினர். அனுசூயாதேவியும் மனம் இரங்கி கடவுள்களுக்கு சுயஉருவை கொடுத்தனள். அப்படிப்பட்ட பெருமை நிறைந்த அத்திரி மகரிசி அனுசூயா தேவியும் தங்கியிருந்த ஆஸ்ரமம் தான் இன்று ஆஸ்ராமம் என்று அழைக்கப்படும் சிற்றூர். மேற்படி அத்திரி மகரிசி தான் சாஸ்தாவாக இருந்து அருள் பாலிக்கிறார் என்று கூறுவோரும் உண்டு. அத்திரி மகரிசி யாகம் செய்த ஓமகுண்டம்தான் தற்போது ஆசிராமத்தில் உள்ள தீர்த்தக்குளம். இக்குளத்தில் ஒரு மண்டலம் நீராடினால் எல்லா நோய்களும் உடலைவிட்டு நீங்கும் என்பது இவ்வூர்மக்களின் நம்பிக்கை.

ஸ்ரீ அஞ்சனம் எழுதிய கண்டன் சாஸ்தா பெயர்க் காரணம்

சில நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டு கண்ணும் தெரியாத அந்தணர் ஒருவர் தினமும் இத் திருக்கோயில் சாஸ்தாவை வழிபட்டு வந்தார். ஒரு நாள் இவர் இக்கோவிலில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தபோது அவரது கண்களில் யாரோ மைதீட்டுவது போல தெரிந்ததும் திடுக்கிட்டு விழித்தார். என்ன ஆச்சரியம்? அவருக்குக் கண்பார்வை வந்துவிட்டது. உடனே அங்குள்ள சாஸ்தாவை வணங்கி ஆனந்தமிகுதியால் ''அஞ்சனம் எழுதியது கண்டேன் சாஸ்தா' என்று உரக்கக் கூவினார். அது நாளடைவில் மருவி 'அஞ்சனம் எழுதிய கண்டன் சாஸ்தா' என்று மருவிவிட்டது. அஞ்சனம் என்றால் மை, எழுதிய என்றால் தீட்டிய என்றுபொருள் படும். கண்ணில் மைதீட்டிய கடவுள் என இவரை வழிபடுகிறார்கள். அந்த அந்தணர் தன்னுடைய சொத்துக்கள் முழுவதையும் இக் கோயிலுக்கு எழுதி வைத்துவிட்டார். அவரது வாரிசுகள் இன்றும் இத்திருக்கோயிலுக்கு வந்து வழிபட்டுச் செல்கிறார்கள்.

ஆலமர் செல்வன் தட்சிணாமூர்த்தி

'கோயிற் கலைச்செல்வர்' தி. இராசமாணிக்கம்

இந்த வடிவம் எல்லா சிவாலயங்களிலும் தென்முகமாக அமைக்கப் பெறுவதால், 'தட்சணா மூர்த்தி' என வடமொழியிலும், 'தென் முகக்கடவுள்' எனத் தமிழிலும் அழைக்கப் பெறுகிறது. மேலும் இது கல்லாலின் கீழ் உருவாக்கப்படுவதால், 'ஆலமர் செல்வன்' என்றும் வழங்கப் பெறுகிறது. 'ஆல்கெழு கடவுள்' என்பர் நக்கீரனார் தம் திருமுருகாற்றுப் படையில்

புராண வரலாறு

ஒரு காலத்தில் பிரம்மா, சனகன், சனந்தனன் சனாதனன், சனற்குமாரன் என்ற நால்வரைத் தோற்றுவித்து, தான் செய்யும் படைப்புத் தொழிலைச் செய்யும்படி சொன்னான். அதனை அவர்கள் மறுத்து, சிவபெருமானது திருவடிகளை அடைய தவம் மேற்கொண்டனர். அவர்களது வேண்டுகோளின் பேரில் இறைவன் அவர்களுக்கு சரியை, கிரியை, யோகம் என்ற மூன்று நிலைகளை அறியச் செய்தான். நான்காவதாகிய ஞானம் சொல்ல இயலாதது; அதை உணர்த்த தன் மார்பின் எதிராக ஒரு கரத்தை மௌன முத்திரை காட்டி, செயல் ஒன்று இல்லாது. யோகம் செய்வார் போன்று இருந்தான்.

''கரதலம் ஒன்று சேர்த்தி உரத்திற் சீர்கொள்
மோன முத்திரையைக் காட்டி
ஒருகணம் செயல்ஒன்று இன்றியோகு செய்
வாரின் உற்றான்'' [1-3-12]

என்பது கந்தபுராணம். இதைக் கண்ணுற்ற முனிவர்கள் தங்கள் உள்ளம் ஒடுங்கப் பெற்று, ஞான நிலையை அடைந்தனர்.

இலக்கியப் பெருமை

இந்த வடிவின் ஆன்மிக மாண்பில் திளைத்து தம்மை மறந்து வியந்து புகழாத அருளாளர்களே இல்லை எனலாம். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் பார்ப்போம்.

'காது பொத்தர், கின்னரர் உழுவை கடிக்கும்
பன்னகம் பிடிப்பருஞ்சீயம்
கோதில் மாதவர் குழுவுடன் கேட்பக் கோல
ஆல நிழற் கீழ் அறம் பகர'
(திருநின்றியூர்—6)

என்பர் சுந்தரர். அதாவது முனிவர்களுடன் வானவர்களாகிய கின்னரர்கள் விலங்கினத்தை சார்ந்த கொடுமை பொருந்திய புலி, சிங்கம், நஞ்சுடைய பாம்பு ஆகியவையும் அவன் அருளிச் செய்தனவற்றைக் கேட்டனவாம்.

திருவிளையாடற்புராணத்தில் பரஞ்சோதி முனிவர் இந்த வடிவை சொல்லோவியமாகப் படைத்துள்ளார். அந்தப் பாடல் வருமாறு:

'சீதளப்பளிக்கு மேனியும் பளிக்குச்
செழுமலை பதித்த துப்பன்ன
பாதமும் செவ்வாய் மலரும் முக்கணும்
பங்கயச் செங்கரம் நான்கும்
வேதபுத்தகமும் அமுதகும்பமும் தன்
விழிமணிவடமும் மெய்ஞ்ஞான
போதமுத்திரையும் தரித்ததோர் தனிமைப்
போதன்' (16-14)

அதாவது பளிங்குமலை போன்ற உடலும், மலையின் அடியில் பதித்த பவளம் ஒத்த அடிகளும், செந்தாமரை போன்ற வாயும், மூன்று கண்களும், வேதபுத்தகம், அமுதகுடம், உருத்திராக்க வடம், சின்முத்திரை ஆகியவைகொண்ட. தாமரையை ஒத்தகைகளும் கொண்ட மேலோன் என்பதாம்.

திருவுருவின் மாண்பு

சிவபெருமானது வடிவங்களை ஐந்தாகப் பிரித்துள்ளனர். அவற்றில் ஒன்று யோகம், ஞானம், இசை ஆகியவற்றைக் கற்பிக்கும் ஆலமர் செல்வன் திருவுருவம்.

'உருமூன்றுமாகி' என்ற மணிவாசகப் பெருந்தகையின் திருவாக்கிற்கு அறவடிவு, அறவாசான் வடிவு, மறவடிவு என்றும் பொருள் சொல்லப்படுகிறது. அறவாசன் வடிவம்தான் ஆலமர் செல்வன் திருவுருவம்.

சிவபெருமானது வடிவங்களில் இதற்கு மட்டும்தான் வீணையை அமைக்க ஆகமங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் பல இடங்களில் 'வீணையர்' என்றே அருளி யுள்ளார். 'கலை ஞானம் கல்லாமே கற்பித்தானை' என்பர் திருநாவுக்கரசர். யோக நெறி, ஞானநெறியை மட்டுமின்றி, இசைக்கலையையும் பயிற்றுவிக்கும் ஆசான் வடிவம் இது.

இளமை, யாக்கை செல்வம் யாவும் அழியத்தக்கன; ஞான நிலையே என்றும் அழியாதது. எனவே அழித்தற் கடவுளாகிய சிவபெருமானை ஞானநெறியைப் புகட்டும் ஆலமர் செல்வனாகக் கொண்டது மிகவும் பொருத்தமன்றோ?

உலகம் அறிய வேண்டிய அறம் முதல் நான்கினையும் முனிவர்கள் மூலம் அருளியதாக மணிவாசகப் பெருமான் 'திருச்சாழல்' என்ற பகுதியில் இந்த வடிவத்தின் சிறப்பை எடுத்து உரைக்கிறார்.

இறைவன் பெண் ஒரு பாகத்தான் என்றும் அவனது யோக இயல்புதான் சிறப்பு மிக்கது என்பதை 'மங்கையோடு இருந்தே யோகு செய்வானை' எனக் கூறியதின் மூலம் கருவூர் தேவர் வலியுறுத்துகிறார்.

குறிப்பிட்ட குணம் மிக்குடையானை அக்குணமாகக் கொள்வது தமிழ் இலக்கிய மரபு. ஆதன்படி, இந்த வடிவம் அமைதியின் திருவுருவமாம்.

உள்ளுறைப் பொருள்

ஆல் என்றால் நிறைவு என்பது பொருள். ஆலமரம், என்றால் சிவபெருமானைப் பற்றிய நினைவு நிறைந்த நெஞ்சம். ஆலமரம் அரசனது நால்வகைப் படைகளை நிறுத்த இடம் தருவது போன்று எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்ற நான்கும் தங்க நெஞ்சு இடம் அளிக்கிறது. அறம் நால்வருக்கு உரைத்தது என்பது எண்ணம் ஆகியவற்றை அற வழியில் ஒழுகச் செய்வது என்பது பொருளாம். கல்லால் என்றால் கற்றற்குப் பொருத்தமாகிய விரிந்த இடமாம்.

ஆலமர் செல்வனின் காலடியில் உள்ள முயலகன் அறிவீனத்தை உணர்த்துகிறது; மேலும் அவனால் அறிவீனம் போக்கப்படுவதையும் சுட்டிக்காட்டுகிறது.

இவனது கையில் உள்ள ஓலைச்சுவடி அறிவையும், அக்கமாலை ஆருயிர்களுக்கு அருள் புரிபவதையும் உணர்த்துகின்றன.

இவனது கையில் பொதுவாக அமைக்கப்படும் சின்முத்திரை ஞானத்தைக் குறிப்பால் உணர்த்தும் அடையாளமாம். ஆள்காட்டி விரலும் பெருவிரலும் ஒன்று சேர்ந்து இருக்க, ஏனைய மூன்று விரல்கள் தனியாக இருப்பது சின்முத்திரையாம். பெருவிரல் இறைவனையும், ஆள்காட்டி விரல் ஆருயிரையும் ஏனைய மூன்று விரல்கள் ஆணவம், மாயை, கன்மம் என்ற மும்மலங்களையும் குறிக்கின்றன. ஆருயிர் மும்மலங்களின்றும் விடுபட்டு, இறைவனை அடைந்தால் வீடுபேறு பெறலாம் என்பதை இது உணர்த்துகிறது.

செயல்புரிவதால், மகிழ்ச்சி உண்டாகும். தூக்கம், மற்றும் இறப்பு ஆகியநிலைகளில் மனம் தானாக அடங்குகிறது; விழித்தபின் அல்லது மறுபிறவி எடுத்தபின், மனம் மீண்டும் செயல்படுகிறது. மனிதன் தன் மனதை அடக்கினால் அதனால் ஏற்படும் நிம்மதி நிலைத்து இருக்கும். இதைத்தான் அமைதியின் திருவுருவமான ஆலமர் செல்வன் வடிவம் சொல்லாமல் சொல்லுகிறது.

ஆகக விதிகள் :— இவற்றின்படி, இந்த வடிவை நான்கு வகைகளாக அமைக்கலாம். அவையாவன:—

1. யோகதட்சிணாமூர்த்தி
2. வியாக்யானதட்சிணாமூர்த்தி
3. ஞானதட்சிணாமூர்த்தி
4. வீணாதர தட்சிணாமூர்த்தி

திருக்கோயில்களும் திருவுருவமும்

மாமல்லபுரத்தில் உள்ள தர்மராஜர் இரதத்தில்தான் இந்த வடிவம் முதன் முதலாக தென்புறமாக அமைக்கப்பட்டது.

முற்காலத்தில் சைவக் கோயிலாயினும் சரி வைணவக் கோயிலாயினும் சரி, கருவறையின் வெளிப்புறச் சுவரில் தென்புறமாக இந்த வடிவத்தை அமைக்கும் மரபு பின்பற்றப்பட்டு வந்தது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் உள்ள மன்னார்கோயில் உள்ள இராஜேந்திர சோழ விண்ணகரம் என்ற திருமால் கோயிலை உதாரணமாகக் கூறலாம்.

இந்த வடிவமே இல்லாத சிவாலயமே கிடையாது.

திருவுருவில் மாற்றங்கள்

பல்லவர்கள் காலத்தில் இந்த வடிவத்துடன் மானும் பாம்பும் அமைக்கப்பட்டன. இதுஆலமர் செல்வன் வனத்தில் உறைவதைச் சுட்டிக்காட்டுகிறது. சோழர்கள் காலத்தில் மானுக்குப் பதிலாக சனகாதி முனிவர்கள் உருவாக்கப்படலாயினர்.

அரிய வடிவங்கள்

ஆகமவிதிகளின்றும் வேறுபட்ட வடிவங்கள் ஆங்காங்கு சில கோயில்களில் உள்ளன. அவற்றில் ஒரு சில :—

1. கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயிலில் மிருதங்கத்துடன் கூடிய ஆலமர் செல்வன் வடிவம் உள்ளது.

2. காளையுடன்கூடிய ஆலமர் செல்வன் வடிவங்ககளைத் திருமயிலாடுதுறை வள்ளலார் கோயில், சேந்தமங்கலம் ஆபத் சகாயேசுவரர் கோயில், மேலக்கடம்பூர் அமிர்தகடேசுவரர் கோயில் ஆகியவற்றில் காணலாம்.

3. கொடும்பாளூர் மூவர் கோயிலில் வீணாதர தட்சணாமூர்த்தி வடிவம் உள்ளது.

4. காளையுடன் கூடிய ஆலமர் செல்வனை நின்ற திருக்கோலத்தில் திருநாவலூர் பக்தஜனேசுவரர் கோயிலில் காணலாம்.

5. இவன் நின்ற திருகோலத்தில் மேலப் பழுவூர் அகத்தீசுவரம் என்ற கோவில் அமைக்கப்பட்டுள்ளான்.

6. ஆலமர் செல்வனது ஏறத்தாழ 6 அடி உயரமுள்ள வடிவத்தை திருவொற்றியூரில் காணலாம்.

7. ஓலைச்சுவடி, பாம்பு ஆகிய ஏதும் கைகளில் அமைக்கப்படாத வடிவம் பழனியை அடுத்துள்ள பெரிய ஆவுடையார் கோயிலில் உள்ளது.

8. உடுமலைப் பேட்டையை அடுத்துள்ள கடத்தூர் அர்ச்சனேசுவரர் கோயிலில் வெள்ளைக் கல்லால் ஆலமர் செல்வன் வடிவம் உருவாக்கப்பட்டுள்ளது.

9. பொள்ளாச்சியை அடுத்துள்ள தேவம் பாடி உலகில் உள்ள அமணலிங்கேசுவரர் கோயிலில் இந்த வடிவம் சுகாசனத்தில் உட்கார்ந்தபடி காணப்படுகிறது.

10. திருவையாறு ஐயாறப்பர் கோயிலில் உள்ள வடிவத்தின் காலடியில் முயலகனுக்குப்பதிலாக ஆமை அமைக்கப்பட்டுள்ளது.

பிற மாநிலங்களும் திருவுருவமும்

1. ஆந்திர மாநிலத்தில் சுருட்டப்பள்ளி வால்மீகேசுவரர் கோயிலில் இவன் காளையுடன் மட்டுமின்றி அன்னை பராசக்தியுடன் காணப்படுகிறான்.

2. மராட்டிய மாநிலத்தில் உள்ள எல்லோரா கைலாயநாதர் கோயிலில் ஆலமர் செல்வன் நான்கு முனிவர்களுக்குப் பதிலாக நான்கு நாகலோகப் பெண்களுக்கு யோக நெறியைக் கற்பிப்பதாக அமைக்கப்பட்டுள்ளான்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் !

சாத்திரம் பல பேசும்
சழக்கர்காள்
கோத்திரமும் குலமும்
கொண்டு என் செய்வீர்

—திருநாவுக்கரசர்

பொது

வட நாட்டில் இடைக் காலத்திற்குப் பின் இந்த வடிவை அமைப்பது அரிதாகிவிட்டது. எனவே இதுவும் சிவபெருமானுடைய பிச்சாடன மூர்த்தி கங்காள மூர்த்தி வடிவங்களைப் போன்று தென்னகத்திற்கே உரிய ஒன்றாகி விட்டது.

அழிஞ்சில் மரத்தீசர்

உறையும் சின்னகாவணம்

புலவர் இரா. ஜெகதீசன், எம்.ஏ.

உலகம் உய்யும்பொருட்டு இறைவனால் படைக்கப்பட்டவற்றுள் மரங்களும் சேரும். ஒவ்வொரு மரவகைக்கும் இறைவனருளால் மனிதன் பல பெயர்களிட்டு அவற்றின் பலன் களை அனுபவித்து வருகிறான். அவ்வகை மரவகைகளுள் ஒன்று ஏர் அழிஞ்சில் என்னும் மரமாகும். அம்மரம் எல்லா இடங்களிலும் காண முடியாதது; விசேடத்தன்மை கொண் டது. அனைத்துவகை மரங்களைப் போன்றே இமமரமும் தழைத்து வளரும்; பூக்கும்;காய்க் கும்; பழுக்கும். ஆனால் பழம் பழுத்துத் தரை யில் வீழ்ந்து கிடக்காது. மரததில் துள்ளி ஒட்டிக் கொள்ளும். இநத விசேடத் தன்மை யைக் கண்டு வியந்த அத்வைத கர்த்தா ஆதி சங்கரர் தாம் அருளிய 'சிவானந்த லகரி' என்ற நூலில் பக்தி விசேடத்தை விளக்கும் பான்மையில் 'அங்கோலம் நிஜபீஜசந்ததிரயம்' என்று கூறியுள்ளார். அங்கோலம் என்பது ஏர் அழிஞ்சில் மரத்தைக் குறிக்கும் வடமொழி வார்த்தையாகும். . ஏர் அழிஞ்சில் எனபதற்கு அழகும் சிறப்பும் வாய்ந்த அழிஞ்சில் மரம் என்பது பொருளாகும்.

அத்தகு சிறப்புக்குரிய வியத்தகு மரத்தை செங்கை வடக்கு மாவட்டம் பொன்னேரி வட்டம் சின்னகாவணம் என்ற ஊரில் காண லாம். அவ்வூர் சென்னைக்கு வடக்கே 35 கி.மீ தொலைவில் உள்ளது. அவ்வூரிற்குச் செல்ல பொன்னேரி மின்வண்டி நிலையத்தில் இறங்க வேண்டும். சென்னை பழவேற்காடு பேருந்தில் சென்றால் சின்னகாவணத்திலேயே இறங்கி அருள்மிகு நூற்றெட்டீசுவரர் திருக்கோவிலில் கண்ணாரக் கண்டு வியக்கலாம்; வணங்கலாம். ஏர் அழிஞ்சில் மரமேஅக்கோயிலின்தல விருட்ச மாகும். அத்தல விருட்சத்தைப் படத்தில் காணலாம்.

ஊரின் வடகிழக்கு மூலையில் அத்திருக் கோயிலைக் காணலாம். இரண்டு சிவலிங்க மூர்த்திகளைக் கொண்ட புராதன திருத்தலம் அது. நான்கு வேதங்களிலும் ஆன்ற புலமை வாய்ந்த சான்றோர்கள் ஒரு காலத்தில்வாழ்ந்த காரணத்தால் சதுர்வேதபுரம் என்றபெயரும் அவ்வூருக்கு உண்டு. அங்கு கோயில் கொண்ட சிவனாரின் திருப்பெயரும் சதுர்வேதபுரீஸ்வரர் ஆகும். அவருக்கான அம்பாள் சந்நிதி இல்லை. அக்கோயிலில்ருந்து திருப்பாலைவனம் வரை ஒரு சுரங்கப் பாதை இருந்ததாகச் செவி வழிச் செய்தி ஒன்றுண்டு. ஆனால் அப்படியொன்று இருந்ததாக இன்று காண இயலவில்லை.

வித்யா மண்டல மகரிசி என்றும், குறுமுனி கும்பமுனி என்றும், கோசலநாடுடைய வள்ளல் இராமபிரானுக்கு ஆதித்ய இருதயம் என்னும் சுரந்தத்தை உபதேசித்தவர் என்றும், சிந்தா மணிக் கிருகத்தில் திருவோலக்கம் கொண்டிருக் கும் அன்னை இராசராசேச்வரியின் மீது மாத்ருகா கணங்கள வந்தித்து வந்த இலலிதா சகஸ்ர நாமத்தை அயக்ரீவர் மூலம் அறிந்து அதை உலகமாந்தரும் சொல்லி உய்யும் பொருட்டு பரஸ்யம் செய்தவர் என்றும், நாக மது நாகமுற நாகமென நின்றவர் என்றும், உம்லாபா முத்திரையின் மணாளர் என்றும் போற்றப்படும் அகத்திய முனிவர் ஒரு காலத் தில் தென்புலத்திலிருந்து பாதயாத்திரையாக காசிக்குச் செல்லப் பயணமிட்டுச் சிவத்தலங் களைத் தரிசித்து வரும் நாட்களில் சின்னகாவ ணம் என்னும் திருத்தலத்தை அடைந்து வேத விற்பன்னர்கள் உறையும்ஊராக அப்பதிஇருந்த தால் சின்னாட்கள் தங்கியிருக்கத் திருவுள்ளங் கொண்டார்.

அங்குக் கோயில் கொண்டுள்ள சிவனாரைச் சேவிக்கச் சென்ற அவர் ஏர் அழிஞ்சில் மரத் தின் மாட்சி உணர்ந்து வியந்து நிற்கும்பொழுது ஏறூர்ந்த பெருமான் அருளால் எழுந்த ஓர் அசரீரி வாக்கு அவர் காதில் ஒலித்தது. 'அகத் தியரே! 'இவ்வூரின் மருங்கோடும் ஆரண்யநதி யின் மணலைக் கொண்டு நூற்றெட்டு நாட்கள் சிவலிங்க வழிபாடு இம்மரத்தின் கீழிருந்து நீர் செய்வீராயின் அச்செயல் நமக்கு உவப்பை தரும்' என்றதொரு வாக்கு பிறந்தது.

அவ்வாக்கு வேதநாயகனின் அருள்வாக் காகத் திருவுளங்கொண்டு ஆரண்ய நதியில் தினமும் நீராடி-திருநீறணிந்து-சித்தங்களிகூர நமசிவாய மந்திரத்தை நாவார ஓதித் தினமும் பிடிமணல் கொண்டு சென்று அழிஞ்சில் மரத் தடியில் இட்டுப் பூசித்து வந்தார். தாம் பிர திட்டை செய்த சிவலிங்கத்திற்கு நூற்றெட்

டீஸ்வரர் என்றும் திருப்பெயர் சூட்டினார் என்பது வரலாறு. நாளடைவில் அம்மணல் லிங்கத் திருமேனி உருமாறி விநாயகர் தோற்றத்தில் காட்சியளிப்பதாயிற்று. அங்கு சென்றால் இதன் உண்மையைக் காணலாம்.

அந்நாளில் நம் இமிழ்கடல்வேலித் தமிழகத்தை ஆண்ட பல்லவர்குலத் தோன்றல் நந்திவர்மன் என்பான் ஏர் அழிஞ்சில் மரச்சிறப்பையும், அகத்தியர் வழிபட்ட சிவலிங்கத் திருமேனிச் சிறப்பையும் செவியுற்று அங்கு எழுந்தருளி.பெரியதொரு சிவாலயத்தைக் கட்டினான். பெரிய மதிற்சுவருடன் மூன்றுநிலை முகப்புக் கோபுரமும், இறைவனுக்கு விமானமும் அமைத்தான்.

நூற்றெட்டீஸ்வரருக்குத் தேவியாராக விளங்க அஷ்டோத்தரவல்லி என்னும் அம்பாள் திருமேனியையும் நிறுவி குடமுழுக் காட்டி வரலாற்று நீரோட்டத்தில் வற்றாத ஊற்றானான். அஷ்டோத்தரம் என்றால் நூற்றெட்டு என்று பொருள்.

சதுர்வேதபுரீஸ்வரருக்கும் தனிச் சந்நிதி உண்டு. நூற்றெட்டீஸ்வரரே பிரதான லிங்க மூர்த்தியாவார். இந்நாள் வரை அவ்விரு மூர்த்திகளுக்கும் இரண்டு கால வழிபாடு நடந்து வருகிறது. பொதுவாக எல்லாச்சிவன் ஆலயங்களிலும் அம்பாள் திருவுரு தெற்கு நோக்கியதாக இருக்கும். ஆனால் இங்கு கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம்; நின்ற வண்ணம்,

விநாயகர், வேலவர் சந்நிதிகளும், பரிவார தேவதைகளும், நவக்கிரகப் பிரதிட்டையும் உண்டு. நாளும் வழிபாடு, பிரதோஷ வழிபாடு கார்த்திகை வழிபாடு, மார்கழி மாதத்தில் மாணிக்க வாசகர் திருவீதி உலா, ஆருத்ரா தரிசனம் அனைத்தும் உண்டு.

அதுஒரு பழைமையான திருக்கோயில். பாழடைந்த நிலையில் இக்கோயில் இருந்தபோது சுமார் 45 ஆண்டுகட்கு முன்னால் அவ்வூரில் வாழ்ந்த பெருநிலக்கிழார் பெரியதம்பி முதலியார் என்பாரின் பெருமுயற்சியால் கோயில் புதுப்பிக்கப் பெற்றது. மரஞ்செடிகள் மண்டிக் கிடந்த விமானம், மூன்றுநிலைக் கோபுரம் ஆகியவற்றைப் பொலிவுபடுத்தி குடமுழுக்கு வைபவம் நடாத்தி பத்துநாள் பெருவிழாவும் நிகழ்த்தினர். கருவறை விமானத்திற்கு நிகரான உயரங்கொண்ட கொடிக்கம்பம் உண்டு. அக்கொடிக் கம்பம் சென்ற ஆண்டு பெய்த மழையில் விழுந்து விட்டது. தற்போது பெரியதொரு தேக்கு மரத்தாலான கொடிக்கம்பம் நாட்டப் பெற்று குடமுழுக்கு விழாவும் நடைபெற உள்ளது.

கோயிலில் இரு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. அவற்றைப் படித்துத் தெளிவுபடுத்துவார் இல்லாமல் வறிதே சுவரில் பதிக்கப் பெற்றுள்ளது. புலமை பெற்ற அறிஞர் அவற்றைப் படித்துத் தெளிவுபடுத்தினால் புதிதான செய்திகள் கிடைத்திடக்கூடும்.

எத்துணையோ திருத்தலங்களைக் கண்டு தொழும் பக்தர் குழாம் இக்கோயிலையும் தரிசித்துப் பலன் பெறுவார்களாக.

ஏர் அழிஞ்சில் மரம்

ஸ்ரீலட்சுமி நரசிம்ம ஸ்வாமி போற்றி மாலை

வீ. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை

மார்கழித் திங்களில் முதியோர் சபைதனில்
மாண்புறப் பாடும்திறன் தருவாய் போற்றி!
கார்சுழித் தோடும்கடி காசல மலைமேல்
காண்போர் வாழ்த்தும் கனியே! போற்றி!
பார்விழிச் சுடரோன் வான்மிசை வருமுன்
பாதமலர் நாடித்தொழு வோம்ஐயா!
போற்றி!
நார்கிழித் தாங்கிரண் யன்குடல் கிழித்த
நாதனாம் சிங்கனே! போற்றி! போற்றி!

மாதவ ரிசிகளேழ் வரந்நாள் செய்த
மாபெரும் பிரம்மோத் ஸவமூலா! போற்றி!
பாதவடி யேந்தி வரும்**அனு மார்தனை**
பார்புகழ் சிறுமலை சேர்த்தாய் போற்றி!
நாதஸ்வர இசையோடு மேளதாளம் முழங்க
நால்வீதி வலம்வரும் நாயகனே! போற்றி!
காதல்துணை யாம்சுதா வல்லி யாருடன்
காட்சி தரும்கோவே! போற்றி; போற்றி!

வையத்து வாழும் அன் பர்களே! வாரீர்!
வானோர்
வாழ்த்தும் பஜனைகள் செய்வோம் போற்றி
பையத்துகில் அவிழ்ந்து பாஞ்சாலி புலம்பப்
பெண்மானம் காத்தானைப் பணிவோம்
போற்றி!
மையத்துமேவும்விமானமாம்யேம கோடிதனில்
மாண்கிழக் கமர்ந்தானைத் தொழுவோம்
போற்றி;
நையத்தொடர்ந் தழும்குழந் தைகள்போல்
நெஞ் சார
நாதன்பால் அழுவோம்! போற்றி! போற்றி!

வனவுரித் தரித்தி ரேழுவரு டங்கள்
வனவாசம் இருந்தானை வாழ்த்துவோம்
போற்றி!
மனங்குளி ரத்தைத் திங்கள் முதற்காலை
மேவும்திரு மஞ்சனம் காண்போம் போற்றி!
இனம்சேரும் காகங்கள் உண்பது போல்நாமும்
இறையடி யார்க்கீந் துண்போம் போற்றி!
நனவாய் கனவாய் நிகழும் சிங்கன்
நாமம்பாடித் துதிப்போம்! போற்றி! போற்றி!

ஓங்கிப் புகழார்ந் தக்கோபு ரத்தின்
ஒருதனித் தலைவா! ஸ்ரீரங்கா! போற்றி!
தேங்கித் தவித்த மாபலிக் கோன்றனை
தாழ்புவி ஆழ்த்திய வாமனா போற்றி;
வாங்கியக் கடன்தர முடியாமல் காலத்தில்
வட்டி செலுத்தும் கோவிந்தா போற்றி!
தாங்கித் தாலாட்டும் பாம்பணை யான்மேல்
துயில்கொளும் தக்கானே! போற்றி!
போற்றி!

ஒருமை யுடன் துதித் தப்பிர கலாதனின்
ஓயாத்துயர் தீர்த்த ஒருவனே! போற்றி!
துருவன் செய்பக் தியால்மனம் மகிழ்ந்து
தொலைவானில் ஜொலிக்கச் செய்தோனே!
போற்றி!
திருடர் களாய்வந் துன்சிலை நகையாவும்
திருடிச் செல்வோரைத் தடுப்பாய் போற்றி!
தருமம் நிலைபெறப் பாரில்யுகந் தோறும்வரும்
தார்மீகப் பெருமானே! போற்றி! போற்றி!

ஆழிமழை பெய்தள விலாப்பயிர் விளைத்து
அவனி யோர்பசி தீர்ப்பவா! போற்றி!
பாழிசேர் வாலிதனை அம்பினால் வீழ்த்தி
பக்தனாம் சுக்ரீவன் வசமானாய் போற்றி!
நாழியரி சிக்கிந் நாளில்நான் படும்பாடு
நீயலால் அறிவார் யாரய்யா! போற்றி!
தாழிதனில் வைத்த வெண்ணை யெலாம்வாரித்
தின்ற கிருஷ்ணா! போற்றி! போற்றி!

அம்ப ரீஷன்விர தமாம்யேகா தசியாக
ஆளாம்தூர் வாசரை அகற்றினாய்: போற்றி
எம்பிரான் கடிகை தனைவெளிச் சுற்றாய்
எவரேனும் சுற்றினால் அருள்பவா போற்றி!
தும்புரு போல்பாடும் புனிதராம் நாரதர்
தினமோதிப் போற்றும் நாராயணா போற்றி!
பம்பர மாய்காண் டிபன்ரதம் ஓட்டிய
பார்த்த சாரதியே! போற்றி! போற்றி!

மாயனைப் பத்துடை அடியார்க் கெளியனை
மனதாரத் தியானம் புரிவோம் போற்றி!
காயனைத் தும் சின் னாளில்கனி யாதல்போல்
கோணுமென் புத்தியைத் திருத்துவாய்
போற்றி!
வாயுள்ளோர்வாழ் கின்றார்! ஐயனே!
வாயிலாரும் வாழ்ந்திடச் செய்வாய்போற்றி
தாயனை யாய்பால் கொடுத்துப் பூதகித்
தன்னுயிர் குடித்தாய் போற்றி! போற்றி!

மாதூர்ந் துலாவும் மார்பில் பிருகுமா
முனிவர் தம்பாதம் பதித்தவா போற்றி!
தாதூவெனக் காளிங்கன் தலைமேல் ஆடியதன்
திருக்கொழித் தப்பால கிருஷ்ணா! போற்றி!
வாதூல குலத்தோன் வகுத்த முறைகால
வழிபாடு களேற்கும் கேசவா! போற்றி!
காதூறும் இசைபாடிப் பணிவோர் தம்குரல்
கேட்டு மகிழ்பவா போற்றி! போற்றி!

புள்ளும் பாடியது பொழுதும் புலர்ந்தது
புக்கானே புரந்தரா யெழுந்திராய்! போற்றி!
முள்ளும் கல்லும் தாண்டி வருகிறோம்
மிக்கானே யெம்மர்ச் சனைபாராய்
போற்றி!
துள்ளும் வினைகள் தொற்றாமல் வேரோடுத்
தொலைத்து என்பால் கனிவாய்! போற்றி!
உள்ளும் தலமெலாம் உறைவோனே யெங்கள்
உளம்வாழும் சிங்கனே! போற்றி! போற்றி!

களந்தனில் விஜயன் கலங்கி நிற்கக்
கனிவோடு கீதைநூல் புகன்றவா போற்றி!
வளம்தரும் தைமாத முதன்மாலை தக்கான்
வள்ர்ஆண் டாள்திரு மணம்பாரீர் போற்றி!
பளப்பள வெனஜொலிக் கும்முடிச் சோதியே!
புனித முகச்சோதி யானவா போற்றி!
மளமள வெனமேளம் தட்டித் திருமணம்
முடிந்தோரை வாழ்த்துவாய் போற்றி!
போற்றி!

புனிதம் வாய்ந்த தீர்த்த மாம்சிலா
புஷ்க ரணியில் குளிப்போம் போற்றி!
குனிந்த படிவலம் வரும்மாதர் குலம்வாழ
குங்குமப் பிரசாதம் கொடுப்பாய் போற்றி!
இனிஎன்றும் தயங்காமல் வரிசையில் நின்று
இளங்கும ரன்முகம் சேவிப்போம் போற்றி!
தனித்தமி ழில்மந் திரங்கள் பாடுகிறேன்
தாளம்போடு வாய்ஐயா போற்றி! போற்றி!

கீழ்வானக் கதிரோன் வருமுன் குளித்துக்
காலைச்சுப் ரபாதம் பாடுவோம் போற்றி!
வீழ்த்திய வேகத்தில் கம்சனை வதைத்து
வசுதேவ தேவகியை மீட்டாய் போற்றி!
சீழ்பிடித் தோரைத்தொடின் சீறிப்பாய் வார்
போலுன்
சீர்பாடும் எனனத்தொடின் சீறுவோய்
போற்றி!
ஈழநாடு போகவோர் பாலந்தனைக் கடல்மேல்
இணைத்த சேதுராமா! போற்றி! போற்றி!

கீசுகீசென் றுக்கத் தியோடும் அனுமக்
குழாம்பசி தீரச்சரிதம் தருவோனே! போற்றி!
வீசுவீசென் றுவீசும் காற்றில் அருள்மணம்
விரவிப் பிணிவகைத் தீர்ப்பவா! போற்றி!
பேசுபேசென் றுப்பேசும் பாமரர் பேச்சில்
பக்தி யோங்கச் செய்வாய் போற்றி!
ஏசுசென் றேசிடும் எத்தர் குழுவை
எரித்து விடுவாய்! போற்றி! போற்றி!

வாலகில் யரென்போர் வளிநீர் கொண்டு
வான்புகழ் தவம்செய் வித்தாய்! போற்றி!
பாலர்முதல் பெரியோர் வரைமுடி நீக்கும்
புனித வேண்டல் ஏற்பாய் போற்றி!
சாலச்சிற ந்தமாத மாம்வைகா சியில்நர
சிம்ம ஜெயந்தி சேவிப்போம் போற்றி!
காலங்கள் மாறினும் மனிதர் மாறினும்
கருணை மாறாக்கோனே! போற்றி! போற்றி!

(இவ்விதழின் அட்டைப் படத்தில்

ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் அலங்கரித்திருக்கிறார்

என்பதை மகிழ்வுடன் தெரிவித்து அவர்தம்

மலரடி போற்றி வழிபடுகிறோம்.)



அரியும் சிவனும் ஒண்ணு

தவத்திரு ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள்

புராணங்களைப் பார்த்தால் சிவனிடம் விஷ்ணு தோற்றுப் போவதாகச் சில இடங்களில் இருக்கிறது. சிவன் விஷ்ணுவிடம் தோற்றுப் போனதாகவும் வரலாறுகள் இருக்கின்றன. சிவன் விஷ்ணுவைப் பூஜித்தார் என்று ஓர் இடத்தில் பார்க்கிறோம். சிவனை விஷ்ணு பூஜித்தார் என்று இன்னோர் இடத்தில் காண்கிறோம்.. சிவனின் அடியைக் காண முடியாமல் விஷ்ணு தோற்றுப் போனார் என்பது திருவண்ணாமலை வரலாறு. 'விஷ்ணு சிவன் இவர்களில் யார் பலசாலி என்பதற்காக தேவர்கள் வைத்த போட்டியில் சிவன் விஷ்ணுவிடம் தோற்றுப் போனார். அப்போது ஸ்தம்பித்துப்போன சிவதனுசுதான் ஜனகரிடம் வந்து, பிறகு அதை ராமர் முறித்துப் போட்டார்' என்று ராமாயணத்திலிருந்து தெரிகிறது. சிவனுக்கு விஷ்ணு பூஜை பண்ணும்போது ஒரு பூ குறைய, உடனே தம் கண்ணையே ஒரு கமலமாகக் கருதிப் பறித்தெடுத்து அர்ச்சித்தார் என்று திருவீழிமிழலைப் புராணம் சொல்கிறது. இங்கே சிவனுக்கு நேத்ரார்ப்பனேஸ்வரர் என்றே பெயர். சிவனுக்கு பிரம்மாவின் தலையைக் கிள்ளியதால் பிரம்மஹத்திதோஷம் ஏற்பட அதைப் போக்கிக் கொள்ள விஷ்ணுவை அவர் பூஜை செய்து, விஷ்ணுவின் அநுக்கிரகத்தால் தோஷத்தைப் போக்கிக் கொண்டார் என்று திருக்கண்டியூரில் வரலாறு இருக்கிறது. இங்கே பெருமாளுக்கு ஹரசாப விமோசனர் என்றே பெயர். இப்படி ஏகப்பட்ட கதைகள் சிவ உத்கர்ஷத்தையும் விஷ்ணு உத்கர்ஷத்தையும் காட்டச் சொல்லலாம்.

'சிவனும் விஷ்ணுவும் ஒன்றுதான் என்றீர்களே? ஒரே ஸ்வாமி தன்னுடனேயே சண்டை போட்டுக் கொள்ள முடியுமா! தன்னையே பூஜித்துக் கொள்ள முடியுமா!' என்று கேட்பீர்கள்.

உங்களுக்குச் சமாதானம் சொல்கிறேன்:

மேலே ராமன் முறித்த சிவதநுசைப் பற்றிச் சொன்னேன் அல்லவா! இந்தக் கதையை ராமனுக்கே சொன்னவர் பரசுராமர் தான். சீதா கல்யாணம் முடிந்து எல்லோரும் அயோத்திக்குத் திரும்பும்போது ராமரைப் பரசுராமர் வழிமறிக்கிறார். 'சிவவிஷ்ணு யுத்தத்தில் 'மக்கார்' செய்த ருத்ரதநுஸை உடைத்துப் பெரிய பேர் வாங்கி விட்டாயே! அப்போது அதை ஜயித்த விஷ்ணுவின் வில் இதோ என்னிடம் இருக்கிறது. இதை நாணேற்றிப் பார்' என்று ராமனிடம் சண்டைக்கு வருகிறார் பரசுராமர்.

இந்தப் பரசுராமர் யார்? விஷ்ணுவின் அவதாரம். இவர் சண்டைக்கு அழைத்த ராமர் யார்? அவரும் அதே விஷ்ணுவின அவதாரம் தான். ஒரே விஷ்ணுவின் அவதாரங்கள் இங்கே சண்டை போட்டுக் கொள்ளவில்லையா! இதில் ஓர் அவதாரம் (பரசுராமர்) இன்னோர் அவதாரத்திடம் (ராமர்) தோற்றுப் போகிறது. சிவனை ஜயித்த விஷ்ணுவின் வில்லை நாணேற்றி, அதே விஷ்ணுவின் அவதாரமான பரசுராமரை ஒட்டிய இன்னோர் அவதாரமான ராமசந்திரமூர்த்தி, பிறகு இதே சிவனுக்கு லிங்கம் வைத்துப் பூஜை செய்து ராமேசுவரத்தை உண்டாக்கியிருக்கிறார். வேண்டுமானால் ஜனங்களுக்கு பக்தி உண்டாக்க அதற்கும் பகவானே வழி காட்டுகிறார். இதற்காகத்தான் சில இடங்களில் சிவன், பக்தராக இருந்து விஷ்ணுவை பூஜிக்கிறார்:



சில இடங்களில் விஷ்ணு, பக்தனாக இருந்து சிவனைப் பூஜிக்கிறார்.

இரண்டும் ஒன்றுதான். ஹரன்ஹரி என்ற பெயர்களே ஒன்றாகத்தான் இருக்கின்றன. இரண்டும் சேர்ந்தே ஹரிஹரன், சங்கர நாராயணன் எனறெல்லாம் ஸமரஸ பாவத்தை வளர்க்கிற மூர்த்திகளாக இருக்கின்றன. ஆழ்வார்கள் பெருமாளையே ஹரி ஹரனாகத்தான் கண்டார்கள்.

''தாழ்சடையும் நீண்முடியும்; ஒண்மழுவும்-சக்கரமும்

சூழ்அரவும்-பொன்நாணும் தோன்றுமால்-சூழும

திரண்டருவி பாயும் திருமலை மேல் எந்தைக்கு

இரண்டுருவம் ஒன்றாய் இசைந்து''

என்று இரண்டிரண்டாக அதிலும் முதலில் சில அம்சங்களையும், இரண்டாவதாக விஷ்ணு அம்சங்களையும் சொல்லி வேங்கடரமண ஸ்வாமியைப் பாடுகிறார் பேயாழ்வார். 'வெவ்வேறு உருவம் இருந்தாலும் ஒருவன் இன்னொருத்தனில் இருக்கிறான்' என்று சொல்லி இங்கும் முதலில் சிவனையே பாடுகிறார் பொய்கை ஆழ்வார்.

'பொன் திகழுமேனிப் புரிசடையம் புண்ணியனும்

நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்

இருவரங்கத்தால் திரிவரேனும் ஒருவன்

ஒருவன் அங்கத்தென்றும் உளன்.'

பெரிய கவி கம்பனோ, 'அரன் அதிகம் உலகளந்த அரி அதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்க்குப் பரகதி சென்று அடைவது அரிய பரிசு' என்று சொல்லிவிட்டார்.

மகா பெரியவர்கள் சொன்னது இருக்கட்டும். சின்ன குழந்தைகள் கூட, 'அரியும் சிவனும்ஒண்ணு; அறியாதவன் வாயில்மண்ணு' என்கிறது. இந்தக் குழந்தை வாக்கு ஆயிரம் பதினாயிரம் வருஷமாக இருந்து வந்திருக்கிறது. குடிசை போட்டால் ஓரிரண்டு வருஷத்தில் பாழாகிறது. செங்கல் வீடானால் நூறு வருஷம் இருக்கிறது. பாறாங்கல்லில் கட்டினால் ஆயிரம் வருஷம் நற்கிறது. அப்படியே உள் பலம் இல்லாத வார்த்தைகளும் கால வெள்ளத்தில் அடிபட்டுப் போகின்றன. ஆனால் இந்தக் குழந்தைச் சொல் காலத்தைக் கடந்து நற்கிறது. இதில் இருக்கிற சாரத்தினால்தான் தத்துவத்தினால்தான் நிற்கிறது.

ஸ்ரீ நாலாயிர திவ்யப்பிரபந்தம்

நயவுரை

டாக்டர் ஜெகத்ரட்சகன்

(11)

கோல் கொண்டுவா எனல்

வேலிக் கோல் வெட்டி விளையாடு வில் ஏற்றி
தாலிக் கொழுந்தைத் தடங்கழுத்திற் பூண்டு
பீலித் தழையைப் பிணைத்துப் பிறகிட்டு
காலிப் பின் போவாற்கு ஓர் கோல் கொண்டுவா
கடல்நிற வண்ணற்கு ஓர்கோல் கொண்டு வா

காக்கையே! வேலிக் கோலை வெட்டி விளையாடும் வில்லாகச் செய்து அதில் நாணேற்றியும், ஆமைத்தாலியைத் தன் பெரிய கழுத்தில் அணிந்துகொண்டும், மயில்தோகைகளைச் சேர்த்துப் புறத்திலே கட்டிக் கொண்டும், பசுக் கூட்டங்களின் பின்னே போகின்ற இவனுக்கு ஒரு கோலைக் கொண்டு வா; கடல் நிற வண்ணற்கு ஒரு கோல் கொண்டு வா.

கொங்கும் குடந்தையும் கோட்டியூரும் பேரும்
எங்கும் திரிந்து விளையாடும் என்மகன்
சங்கம் பிடிக்கும் தடக்கைக்குத் தக்க நல்
அங்கம் உடையது ஓர் கோல் கொண்டு வா.
அரக்கு வழித்தது ஓர் கோல் கொண்டு வா.

மணம்மிகு திருக்குடந்தையில், திருக்கோட்டியூரில், திருப்பேர் நகரில் மற்ற திருப்பதிகளில் திரிந்தாடிக் கொண்டிருக்கிற என் மகனுடைய வலம்புரிச் சங்கேந்திய கைக்கு, நல்ல வடிவுடைய ஒரு கோலைக் கொண்டு வா; செந்நிறக் கோலைக் கொண்டு வா.

கறுத்திட்டு எதிர்நின்ற கஞ்சனைக்கொன்றான்
பொறுத்திட்டு எதிர்வந்த புள்ளின் வாய்
கீண்டான்;
நெறித்த குழல்களை நீங்க முன் ஓடிச்
சிறுக்கன்று மேய்ப்பாற்கு ஓர் கோல் கொண்டு
வா,
தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா.

சினந்து நின்ற கம்சனைக் கொன்றான், தன்னை எதிர்த்த பகாசுரனின் வாயைப் பிடித்துக் கிழித்தான். நெறித்த குழல் முடி இரு பக்கங்களும் அலையும்படியாகக் கன்றுகளுக்கு முன்னேபோய் இளங்கன்றுக்ளை மேய்க்கின்றான். இவனுக்கு ஒரு கோல் கொண்டு வா, தேவமன்னனுக்கு ஒரு கோல் கொண்டு வா.

ஒன்றே உரைப்பான் ஒரு சொல்லே
சொல்லுவான்
துன்று முடியான் துரியோதனன் பக்கல்,
சென்று அங்குப் பாரதம் கையெறிந்தானுக்குக்
கன்றுகள் மேய்ப்பது ஓர் கோல் கொண்டு வா.
கடல்நிற வண்ணற்கு ஓர் கோல்கொண்டுவா.

'பாண்டவருடன் வாழோம்: சில நிலமும் கொடோம்' என்று ஒரு சொல் சொல்லுபவனும், பொன் முடி அணிந்த துரியோதனனிடம் தூதுபோய் பாரதப் போரை உறுதிப்படுத்தி வந்தவனுக்கு, கன்றுகள் மேய்க்க ஒரு கோல் கொண்டு வா; நீலவனுக்கு ஒரு கோல் கொண்டு வா,

சீர் ஒன்று தூதாய்த் துரியோதனன் பக்கல்
ஊர் ஒன்று வேண்டிப் பெறாத உரோடத்தால்
பார் ஒன்றிப் பாரதம் கைசெய்து பார்த்தற்குத்
தேர் ஒன்றை ஊர்ந்தாற்கு ஓர் கோல்
கொண்டு வா,
தேவபிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா.

துரியோதனனிடத்தில் 'பாண்டவர்களுக்கு ஓர் ஊராவது கொடு'' என்று கேட்டும் அந்த ஓர் ஊரையும் பெறாமையினால் உண்டான சீற்றத்தால் கொடாதிருந்ததால் பாரதப் போர் அணிவகுத்த அருச்சுனனுக்குத் தேர் பாகனாயிருந்து நடத்தியவனுக்கு ஒரு கோல் கொண்டு வா; தேவர் தலைவனுக்கு ஓர் கோல் கொண்டு வா.

ஆலத்து இலையான், அரசின் அணை மேலான்
நீலக் கடலுள்நெடுங்காலம் கண்வளர்ந்தான்;

பாலப் பிராயத்தே பார்த்தற்கு அருள்செய்த
கோலப் பிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா,
குடந்தைக் கிடந்தாற்கு ஓர் கோல் கொண்டு
வா.

ஆலிலையில் மகிழ்ந்து துயில் கொண்டிருப்பவனும், பாம்பணையில் பள்ளிகொள்பவனும், கருங்கடலில் வெகு காலமாக அறிதுயில் செய்பவனும், சிறுபருவம் முதல் பார்த்தனுக்கு அருள் செய்தவனுக்கு ஒரு கோல்கொண்டு வா; குடந்தையக் கோவலனுக்கு ஒரு கோல் கொண்டு வா.

பொற்றிகழ் சித்திரகூடப் பொருப்பினில்
உற்ற வடிவில் ஒரு கண்ணும் கொண்ட அக்
கற்றைக் குழலன் கடியன் விரைந்து உன்னை
மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டு
வா,
மணிவண்ண நம்பிக்கு ஓர் கோல் கொண்டு
வா.

சோலை, சுனை, அருவி ஆகியவற்றால் சிறந்த சித்ரகூட மலைச்சாரலில் சீதை மடியில் இராமன் உறங்கையில் சீதை திருமேனியில் பதிந்த உன் கண்களில் ஒரு கண்ணைப் பறித்து கொண்ட நிறைமுடியன்; கடியன் சொன்னது செய்யவில்லையானால் உன்னைச் சீறி உன் மற்றொரு கண்ணையும் பறித்துக் கொள்ளா முன் ஓடிப்போய் கோல் கொண்டு வா. நீல மணியனுக்குக் கோல் கொண்டு வா.

மின்னிடைச் சீதை பொருட்டா, இலங்கையர்
மன்னன் மணிமுடி பத்தும் உடன் வீழத்
தன் நிகர் ஒன்று இல்லாச் சிலை கால்
வளைத்து இட்ட
மின்னு முடியற்கு ஓர் கோல் கொண்டு வா,
வேலை அடைந்தாற்கு ஓர் கோல் கொண்டு
வா.

மின்னல் இடை சீதைக்காக இலங்கைத் தலைவன் இராவணனின் மணிமுடித் தலைகள் பத்தும் அற்று விழும்படி தனக்கு நிகரற்ற வில்லைக் கால் வளையும்படி செய்து, வென்று நின்ற முடி அணிந்தவனுக்கு ஒரு கோல் கொண்டு வா; கடலணை கட்டினவனுக்கு ஒரு கோல் கொண்டு வா.

தென் இலங்கை மன்னன் சிரம் தோள்
துணிசெய்து
மின் இலங்கும் பூண் விபீடண நம்பிக்கு
என் இலங்கும் நாமத்து அளவும் அரசு என்ற
மின் அலங்காரற்கு ஓர் கோல் கொண்டு வா.
வேங்கட வாணற்கு ஓர் கோல் கொண்டு வா

அழகிய இலங்கைக்கு அரசன் இராவணனின் தலை, தோள்களை அம்பினால் துணித்து விபீடணாழ்வானுக்கு அரசு நடத்தக்கடவது என்று அருள் செய்த மின்னல் போல் விளங்குகின்ற வடம் புனைந்தவனுக்கு ஒரு கோலைக் கொண்டு வா; திருமலையில் வாழ்பவனுக்கு ஒரு கோலைக் கொண்டு வா.

அக்காக்காய் நம்பிக்குக் கோல் கொண்டு வா
என்று
மிக்காள் உரைத்த சொல் வில்லுபுத்தூர்ப்
பட்டன்
ஒக்க உரைத்த தமிழ் பத்தும் வல்லவர்
மக்களைப் பெற்று மகிழ்வர் இவ் வையத்தே.

'காக்கையே! ஆடவரில் சிறந்தவனுக்குக் கோலைக் கொண்டு வா' என்று யசோதை சொன்ன சொற்களைச் சீவில்லிபுத்தூர் பெரியாழ்வார் அவ்யசோதையைப் போலவே சொன்ன தமிழ்ப் பாசுரங்களை ஓதியவர், நன் மக்களைப் பெற்று மகிழ்ந்திருப்பர்.

பூச் சூட்டல்

ஆனிரை மேய்க்க நீ போதி
அருமருந்து ஆவது அறியாய்
கானகம் எல்லாம் திரிந்து உன்
கரிய திருமேனி வாட;
பானையிற் பாலைப் பருகிப்
பற்றாதார் எல்லாம் சிரிப்ப.
தேனில் இனிய பிரானே
செண்பகம் பூச் சூட்ட வாராய்.

தேனினும் இனிய அருந்தலைவா! உன்னை உகவாதவர் 'எங்கள் வீட்டில் பானையில் பாலைக் குடித்தான்' என்று சிரிக்கும்படி பசும் பாலைக் குடித்துக்கண்டவர்கள், கண் குளிர இருக்கக்கூடிய உன் நீல முகில் திருமேனி, வெக்கை தட்டின பூப்போல வாடும்படியாக, பசுக்கள் பசும்புல் கண்ட விடமெங்கும் மேயும் போது அவை போன காடு முழுதும் நீ போகிறாய், பிறவி நோய் அறுக்கும் மருந்தாய் நீயிருப்பதை அறிகிறாயில்லை. நான் செண்பகப் பூவைச் சூட்டுவேன் வருக.

கரு உடை மேகங்கள் கண்டால்
உன்னைக் கண்டால் ஒக்கும்; கண்கள்
உரு உடையாய் உலகு ஏழும்
உண்டாக வந்து பிறந்தாய்.
திரு உடையாள் மணவாளா!
திருவரங்கத்தே கிடந்தாய்!
மருவி மணம் கமழ்கின்ற
மல்லிகைப் பூச் சூட்ட வாராய்.

நீர்கொண்டெழுந்த கொண்டல் வண்ணனே! அழகு ஒரு தட்டும் தானொரு தட்டுமாய்க் கண்களின் அழகையுடையவனே! எல்லா உலகங்களும் உன் ஆற்றல் பெறும்படியாக வந்து பிறந்தவனே! 'திருவுக்கும் திருவாகிய' திருமகளின் உவப்புக்காகத் திருவரங்கத்திலே பள்ளி கொண்டிருப்பவனே! தேனின் இவ்வினிய நறுமணம் கமழ்கிற மல்லிகைப் பூச் சூட்டிக் கொள்ள வாராய்.

மச்சொடு மாளிகை ஏறி
மாதர்கள்தம் இடம் புக்கு
கச்சொடு பட்டைக் கிழித்து,
காம்பு துகில் அவை கீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய்
நீள் திருவேங்கடத்து எந்தாய்!
பச்சைத் தமனகத்தோடு
பாதிரிப் பூச் சூட்ட வாராய்.

மச்சோடு கூட மாளிகையிலே ஏறிக் காதற் பெண்கள் இருக்குமிடம் புகுந்து, அவர்தம் மார்பகக் கச்சுகளையும், மேலணியும் பட்டாடைகளையும் கிழித்து அதன்மேல் அணிந்துள்ள கரை கட்டின சேலையையும் கிழித்து, நாடொறும் தீம்புகளைச் செய்பவனே! உயர்ந்த திருமலையில் எழுந்தருளியவனே! பசுமை நிறமுள்ள மருக்கொழுந்தையும் பாதிரி பூவையும் சூட்டி மகிழ வாராய்.

தெருவின்கண் நின்று இள ஆய்ச்சி
மார்களைத் தீமை செய்யாதே
மருவும் தமனகமும் சீர்
மாலை மணம் கமழ்கின்ற;
புருவம் கருங்குழல் நெற்றி
பொலிந்த முகிற்கன்று போலே
உருவம் அழகிய நம்பீ!
உகந்து இவை சூட்ட நீ வாராய்.

தெருவிலே நின்றுகொண்டு தெருவில் விளையாடும் இளம் இடைப் பெண்களுக்குத் தீமை செய்யாதே மருவும் மருக்கொழுந்தும் அழகிய மாலைகளில் நறுமணம் கமழ்கின்றது. புருவமும் கார் குழலும் நடுவே விளங்கும் திருநெற்றியும், முகில் கன்று போலே பொலியும் வடிவில் சிறந்த அழகனே! இவற்றை விரும்பி நான் உனக்குச் சூட்டிப் பார்க்க வேண்டும். வாராய்.

புள்ளினை வாய் பிளந்திட்டாய்
பொரு கரியின் கொம்பு ஒசித்தாய்;
கள்ள அரக்கியை மூக்கொடு
காவலனைத் தலை கொண்டாய்
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க
அஞ்சாது அடியேன் அடித்தேன்;
தெள்ளிய நீரில் எழுந்த
செங்கழுநீர் சூட்ட வாராய்.

உன்னைக் கொல்ல வந்த கொக்கின் வடிவமான பகாசுரன் வாய் கிழித்தவனே! வில் விழாக்காண அழைத்து, உன்னுடன் போர் புரியும் குவலயாபீடம் என்கிற யானையின் கொம்பைப் பறித்தவனே! சூர்ப்பணகையின் மூக்கையும், இராவணனின் தலையையும் அறுத்தவனே! நீ வெண்ணெயை அள்ளி விழுங்கவும் குழந்தை என்றும் பாராது அஞ்சாமல் அடித்தேன்; துடித்தேன். தெளிந்த நீரிலே எழுந்த செங்கழுநீர்ப் பூக்களைச் சூட்டிக் கொள்ள வாராய்.

எருதுகளோடு பொருதி,
ஏதும் உலோபாய் காண், நம்பீ!
கருதிய தீமைகள் செய்து
கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்;
தெருவின்கண் தீமைகள் செய்து
சிக்கென மல்லர்களோடு
பொருது வருகின்ற பொன்னே!
புன்னைப் பூச் சூட்ட நீ வாராய்.

காதல் நப்பின்னையை அடையக்கொடிய ஏழு எருதுகளுடன் போர் செய்து அவற்றின் திமிலைக் கைக் கொண்டவனே! கம்சனை உன் திருவடிகளாலே உதைத்தாய். வழியில் தீம்பு செய்த மல்லர்களுடன் போர் செய்து வென்றவனே! பொன் போன்றவனே! திருமேனியிலே விளங்கும் குழலில் புன்னைப் பூச்சூட்டவாராய்.

குடங்கள் எடுத்து ஏற விட்டுக்
கூத்தாட வல்ல எம் கோவே!
மடம் கொள் மதிமுகத்தாரை
மால்செய வல்ல என் மைந்தா!
இடந்திட்டு இரணியன் நெஞ்சை
இரு பிளவு ஆக முன் கீண்டாய்!
குடந்தைக் கிடந்த எம் கோவே!
குருக்கத்திப் பூச் சூட்ட வாராய்.

எங்கள் நாயகனே! ஆயர்களோடு குடக் கூத்து ஆடுபவனே! கூத்தரசனே! நாற்குண நிலவுமுகப் பெண்களை மயக்கும் மைந்தனே! இரணியன் மார்பை உன் கூரிய நகங்களால் இரு கூறாகும்படியாகக் கிழித்தவனே! திருக்குடந்தையிலே அறிதுயில் கண் வளர் அயனே! குருக்கத்திப் பூச் சூட்டிக் கொள்ள வாராய்.

சீமாலிகன் அவனோடு
தோழமை கொள்ளவும் வல்லாய்!
சாமாறு அவனை நீ எண்ணிச்
சக்கரத்தால் தலை கொண்டாய்;
ஆமாறு அறியும் பிரானே!
அணி அரங்கத்தே கிடந்தாய்!
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்!
இருவாட்சிப்பூச் சூட்ட வாராய்.

தீங்கினையும் பகைமையையும் அறியாத திருமாலிகனோடும் பழைமை கருதி தோழமை கொள்ளும் ஆற்றலுள்ளாய். சொன்னசொல் கேளாமையால் அவன் இறக்கும் வகையைக் காட்டி அவன் தலையைப் பெற்றாய். எதிர் வருவதனை அறியும் பெருமானே! திருவரங்கத்தில் கிடப்பவனே! கலக்கத்தை என்னிலிருந்து நீக்கினாய். இருவாட்சிப் பூவினை உன் திருக்குழலிலே சூட்டுகிறேன் வருக.

அண்டத்து அமரர்கள் சூழ
அத்தாணியுள் அங்கு இருந்தாய்!
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்!
தூமலராள் மணவாளா!
உண்டிட்டு உலகினை ஏழும்
ஓர் ஆலிலையிற் துயில் கொண்டாய்!
கண்டு நான் உன்னை உகக்கக்
கருமுகைப் பூச் சூட்ட வாராய்.

புடவியின் ஏழுலகும் தனிக்கோல். ஆட்சி அருளினவனே! அடியார்களின் நெஞ்சிலே உகந்து திகழ்பவனே! தூய தாமரையில்வாழும் பெரியபிராட்டியார்க்கு நாயகனானவனே! ஏழு உலகங்களையும் திருவயிற்றிலே வைத்து ஒரு பாலகனாக ஆலிலையில் கண் வளர்ந்தருளினவனே! மாலையும். முடியுமாயிருக்கிற உன்னைக் கண்டு, நான் உவக்கும்படி சிறு சண்பகம் பூச்சூட்டிக் கொள்ள வாராய்.

—(தொடரும்).

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ. பிஎச்.டி.
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம். அரசினர் தோட்டம், சென்னை-600002.

மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் ஆலயம் பங்குனி பிரம் மோற்சவத்தில் திருத்தேர் விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. காவல்துறை ஆணையாளர் திருமிகு இராதாகிருஷ்ணன், ஐ.பி.எஸ். அவர்கள், அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் நல்லி குப்புசாமி செட்டியார், ஆலய நிர்வாக அதிகாரி திரு ப. இராஜா, பி.எஸ்சி.பி.எல்., அறங்காவலர்கள் திருமிகு கே. ஆர்.வி. ரமணி, திருமிகு குழுமணிப்பாக்கம் செல்வ ஏகாம்பரம் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயம் பங்குனி பிரம்மோற்சவத்தை முன்னிட்டு திருத்தேர் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு நடேசன் பால்ராஜ் அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதி வாரியத் துறை அமைச்சர் திருமிகு ரகுபதி அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.